விலை சதம் 5

முதற் பதிப்பு

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
8 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு சர்வஜித்து வரு மார்கழி 7 உ திங்கட்கிழமை | Colombo December 22 1947 — ஹிஜிரி 1367 ஸபர் பிறை 9 | இதழ் 201

இலங்கை-இந்தியன் காங்கிரஸ் தூது கோஷ்டி

டில்லிக்குச் செல்வதேன்?

ஒரு அரசியல் நிருபரின் விஷயத்தனத்திற்கு திரு. மோத்தா சாட்டை

கொழும்பு, டிச. 20

பாராளுமன்ற அங்கத்தினர் திரு ஜி. ஆர். மோத்தா மேற்கண்ட அறிக்கை விடுத்திருக்கிறார்:-

இலங்கைவாழ் இந்தியர்களின் அந்தஸ்தையும் உரிமைகளையும் பற்றி இலங்கைப்பிரதம மந்திரியும் இந்தியா பிரதம மந்திரியும் புதுடில்லியில் கலந்து பேசும்போது அவர்களது சம்பாஷணைக்கு உதவியாக இருக்கும் பொருட்டு, இலங்கை இந்தியன் காங்கிரஸ ஒரு தூதுகோஷ்டியை டில்லிக்கு அனுப்பத் தீர்மானித்திருப்பதுகண்டு 'லேக்ஹவுஸ்' பத்திரிகையின் அரசியல் நிருபருக்கு மனக்குழப்பம் ஏற்பட்டிருப்பது ஆச்சரியப்படக்கூடிய விஷயமல்ல. இந்த அரசியல் நிருபர் விஷயங்களைத் திரித்துக் கூறுவதில் கைதேர்ந்தவர். விசேஷ தந்திர முறையால் துவேஷ உணர்ச்சியே அதிகரித்து வந்திருக்கிறது. இன்றையப் பத்திரிகையில் அவர் எழுதியுள்ள விஷயத்திலும் அவர் வழக்கம் போல துவேஷ முண்டாக்கும் விஷயத்தையே கக்கியிருக்கிறார். இலங்கை இந்தியர்கள் இரட்டைப்பிரஜா உரிமை கோருவதன் காரணமாக இலங்கையில் ஆத்திர மேற்பட்டிருப்பதாக அவர் வீண்பழி சுமத்துகிறார். இந்தியர்கள் இரட்டைப் பிரஜா உரிமை கேட்டதே இல்லை. இலங்கை இந்தியர்கள் நாட்டின் இதர மக்களுடன் இலங்கையர்களாகி விடவேண்டுமென்று அவர்களுக்குப் பாடம் படிக்க ஒரு நேருவோ ஒரு கிரியோ தேவையில்லை. இந்த இந்திய - இலங்கைப் பிரச்னை சம்பந்தமாக இருந்துவரும் சங்கடம் என்னவெனில் இந்தியா-இலங்கை சமரசப் பேச்சுகளில் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக பேசிவரும் பிரதிநிதிகளின் பிடிவாதமான போக்கே தகராறுக்குக் காரணம். அவர்கள் இலங்கை இந்தியர் ஜனத்தொகையைக் குறைத்து விடவும் இந்தியர்கள், குறிப்பாக இந்திய தோட்டத் தொழிலாளர்கள் நாட்டு மக்களுடன் கலந்து வாழ்வதற்கு எதிரிடையான காரியங்களைச் செய்யவும் தீர்மானித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இலங்கை அதிக ஜனத்தொகையைத் தாங்க முடியாதென்ற போலிக்காரணத்தைச் சுட்டிக்காட்டி அவர்கள் தங்கள் எண்ணத்தை ஈடேற்ற முயல்வார்களேயாகில் சமரசப் பேச்சு முறிவது நிச்சயம். இப்பொழுது அதிகாரபீடத்திலிருந்துவரும் வகுப்பு வாதிகளுக்கு இந்த உபாயம் எவ்விதமான மகிழ்ச்சியை அளித்தபோதும் அதனால் இலங்கைக்கு நலன் ஏற்படாது. நாட்டின் முக்கால்பகுதி இன்னும் ஜனங்கள் குடியேறுமலும் அப்விருத்தி செய்யப்படாமலுமிருக்கிறதென நிதி மந்திரி தனது வரவு செலவுத்திட்ட விவாதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இந்த அபிவிருத்திக்கு மூலதனமும் ஆள்பலமும் இன்றியமையாத சாதனங்களாகும்.

இந்தியன் காங்கிரஸ தூதுகோஷ்டியை அனுப்ப தீர்மானித்திருப்பதால் அதற்கு பண்டித நேரு மீது நம்பிக்கை இல்லாபோலும் என்று லேக்ஹவுஸ் பத்திரிகை அரசியல் நிருபர் விஷமத்தனமாக கூறுகிறார். பண்டித நேரு குறுகிய மனப்பான்மையுள்ள தேசியவாதியல்ல. அவர் எல்லோருக்கும் பொதுவான நியாயம் வழங்கக் கூடியவர். இலங்கை இந்தியர் சார்பாக பண்டித நேரு அளிக்கும் தீர்ப்பை இலங்கை இந்திய காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது. ஆனால் இங்குள்ள விஷயங்களை பண்டித நேருவுக்கு உண்மையான முறையில் அறிவிக்கவேண்டியது அவசியமாகும். அவரிடம் சமர்ப்பிக்கப்படும் நிபந்தனைகள் இலங்கை வாழ் இந்தியர்களை எவ்விதம் பாதிக்குமென்பதையும் அவருக்கு விளக்கிக் கூறவேண்டும். அப்படிப்பட்ட தகவல்கள் திரு சேனநாயக்காவுக்குக் கூட உபயோகமுள்ளவைகளாக இருக்கலாம். இவ்வித உதவியை இரு பிரதம மந்திரிகளுக்கும் செய்ய இந்திய காங்கிரஸ கடமைப்பட்டிருக்கிறது. இந்தப்பிரச்னைகள் இலங்கை வாழ் இந்தியர்களை பாதிக்கக் கூடியவைகளாகும் ஆதலால், அது சம்பந்தமான தீர்ப்பை இறுதியாக ஏற்றுக் கொள்ளும் பொறுப்பு, இலங்கை ஜனத் தொகையின் ஒரு பகுதியான அவர்களைச் சேர்ந்தது.

மருந்துக் கிடங்கில் வெடி விபத்து

எண்மர் மரணம்; பலருக்குக் காயம்

ஜெனிவா, டிச. 21

போன்னிம்ளன் ரயில்வேயில் உள்ள பிளௌஸ்க் எமிதோஸ் என்னுமிடத்தில் மருந்துக் கிடங்கில் நள்ளிரவில் வெடி விபத்து ஏற்பட்டதாகவும் 8 பேர்கள் கொல்லப்பட்டனர் என அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது. அநேகர் காயமடைந்துள்ளனர். பீதி காரணமாக கிராம மக்கள் இடமகலப் பகுதிக் கிராமத்திலிருந்து வெளியே ஓடிச் சென்றனர். இவ்விபத்து காரணமாக இப்பகுதியில் உள்ள வீடுகள் சேதமடைந்தோ நாசமடைந்தோ உள்ளனவென்று கூறப்படுகிறது. இப்பகுதியிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் முற்றாக நாசமடைந்துள்ளதுடன் ஸ்டேஷன் அதிகாரியும் கொல்லப்பட்டுள்ளார். நிவாரண வேலையிலீடுபட்டவர்கள் துரித நடவடிக்கைஎடுக்கின்றனர். (ராய்ட்டர்)

ஆற்றுப்பாலம் உடைந்ததால் 125 பேர் மாண்டனர்

கொலம்பியா, டிச. 20

கிழக்கு கொலம்பியாவில் மினேரோ நதியின் மீதுள்ள பாலம் இவ்வார முதற்பகுதியில் உடைந்துள்ளது. இதனால் இப்பகுதியில் 125 பேர் இறந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. (ராய்ட்டர்)

சிறுபிள்ளை வாதநோய் பற்றி மகாநாடு

60 நாடுகளுக்கு அழைப்பு

நியூயார்க், டிச. 20

சிறு பிள்ளை வாதம் சம்பந்தமாக பல நாடுகளின் அபிப்பிராயங்களையும் அறிந்துகொள்வதற்கு அடுத்த ஜூலை 28-ம் தேதி ஒரு மகாநாடு நடக்க இருக்கிறது. இம் மகாநாட்டில் கலந்து கொள்ளும்படி 60 நாடுகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

அகில இந்திய மாதர் மகாநாடு

சென்னை, டிச 20

அகில இந்திய மாதர் மகாநாட்டின் 20-வது கூட்டம் சென்னையில் ஸ்ரீமதி அனுசூயா பாய்காலே தலைமையில நடைபெறும். மகாநாடு நான்கு தினங்கள் நடைபெறும் அகில இந்தியாவிலிருந்தும் 300 பிரதிநிதிகள் விஜயம் செய்வார்கள் இந்திய அரசாங்க சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிர்த கௌரி, ஸ்ரீமதி கமலாதேவி சடோபாத்யாய, பம்பாய் ஷெரிப் ஸ்ரீமதி மிதன்லாம் முகலியோர் வருவார்கள். இன்னும் இலங்கை இந்தோனேஷியா, சைனா ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகளும் விஜயம் செய்வார்கள் அமெரிக்கா, பிரிட்டனிலிருந்து மாதர் பிரதிநிதிகள் வருவார்கள். பாலஸ்தீனத்திலிருந்தும், சிந்துவிலிருந்தும் பிரதிநிதிகள் வருவார்கள், டிசம்பர் 29-ம் தேதி தேனும்பேட்டையிலுள்ள காங்கிரஸ மாளிகையில அமைக்கப்பட்ட பந்தலில் மகாநாடு ஆரம்பமாகும்.

பள்ளிவாசலில் குண்டு வெடித்தது

இருவர் கொல்லப்பட்டனர் எழுவருக்குக்காயம்

கல்கத்தா, டிச. 20

மத்திய மாகாணத்தில் பைகார்த் என்னுமிடத்தில் உள்ள பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமைமாலை ஜனங்கள்பிரார்த்தனை செய்துகொண்டிருக்கையில குண்டு வெடித்ததினால் பிரார்த்தனையிலீடுபட்டிருந்த இருவர் கொல்லப்பட்டனர் என்றும், ஏழுபேர் காயமடைந்தனர் என்றும் அறிக்கைகள் கூறுகின்றன இதன் பின் எங்கும் போலீஸ பாதுகாப்பு ஏற்படுக்கப்பட்டுள்ளது. [ராய்ட்டர்]

லண்டனுக்கு நேரு விஜயம்

இந்திய ஹை கமிஷனர் காரியாலய அறிக்கை

லண்டன், டிச. 20

லண்டனிலுள்ள இந்தியஹை கமிஷனர் காரியாலயம் ஒரு அறிக்கை விடுத்துள்ளது. அதில், பிரிட்டனின் அழைப்பை நேருஜி ஏற்கும் நோக்கம் இருப்பதாகவும் ஆனால் தேதி குறிப்பிடப்படவில்லை பென்றும் தேசத்தின் நிலைமை திருந்திய பின் அவருக்கு வசதியான நேரத்திலேயே அவர் லண்டனுக்கு விஜயம் செய்வாரென்றும் அவரது விஜயம்நேசமனப்பான்மைக்கு அத்தாட்சியானதாக இருக்குமென்றும் கூறப்பட்டுள்ளது. (ராய்ட்டர்)

1948ல் அரிசி ரேஷன் அதிகரிக்கப் படலாம்

உணவுக் கமிஷனர் தரும் விபரங்கள்

கொழும்பு, டிச. 21

புதுவருடத்தின் (1948) முதல் ஆறுமாத காலத்துக்கும் அரிசி ரேஷனை அதிகரிப்பது பற்றி உணவு, கூட்டுறவு இலாகா மந்திரி திரு ஏ. ரத்னாயகாவுடன் ஆலோசனை செய்து வருகின்றார் என்றும் உலகின் தானிய விளைவு அதிகரித்துள்ளதாலாகவே இந்த ஆலோசனை நடைபெறுவதாகவும் தெரிகிறது.

இலங்கைக்கு சர்வதேச உணவுச் சபை அடுத்த வருஷத்துக்கு 185,000 டன் அரிசி ஒதுக்கப்பட்டுள்ளது. பிரேஸிலில் இருந்து 20700 டன் அரிசி இலங்கைக்கு வரவேண்டியதுமிகுதி இருக்கிறது. வரவேண்டிய 20,700 டன் அரிசி சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக முடிந்துள்ளனவென்று உணவுக் கமிஷனர் திரு ஆழ்வாப்பிள்ளை கூறுகின்றார். இலங்கைக்குப் பர்மாவிலிருந்தே அடுத்த வருடத்துக்கு அதிக அரிசி கிடைக்குமென்றும் அடுத்த சில தினங்களுள் எகிப்திலிருந்து வரவேண்டிய அரிசி வந்து சேருமென்றும் அடுத்த வருட அரிசி இன்னும் பத்துத் தினங்களில் வர ஆரம்பிக்குமென்றும் பர்மாவிலிருந்து ஜனவரிக்கு 13000 டன் அரிசி வரவேண்டுமென்றும் கமிஷனர் மேலும் தெரிவிக்கின்றார்

உணவுக் கமிஷனர் திரு ஆழ்வாப்பிள்ளை ஜனவரி நடுப்பகுதியில் சிங்கப்பூரில் நடக்கும் தென்கிழக்காசிய தொடர்பு அதிகாரிகள் அரிசி உபகமிட்டி கூட்டத்துக்குச் செல்வார் இங்கு இலங்கைக்கு அதிக அரிசி பெறுவது பற்றி அவர் கோருவார் என்று தெரிகிறது

நெற்சாகுபடி பற்றி விவசாய இலாகா

உத்தேசக் கணக்கு

வாஷிங்டன், டிச. 20

இவ்வருட நெற்சாகுபடி சம்பந்தமாக விவசாயஇலாகாவின் உத்தேச புள்ளி விபரங்கள் வருமாறு:-

வட அமெரிக்காவில் இவ்வருடத்திய உத்தேச நெற்சாகுபடி 9 கோடியே 90 லட்சம் புசல் ஐரோப்பாவில் 5 கோடியே 40 லட்சம் புசல். ஆசியாவில் 657 கோடியே 50 லட்சம் புசல், தென் அமெரிக்காவில் 16 கோடி புசல், ஆபிரிக்காவில் 14 கோடியே30லட்சம்புசல், கடந்தவருடத்திய சாகுபடியிலும் பார்க்க இவ்வருட உத்தேச தொகை சிறிதளவும் அதிகமாகவே இருக்கிறது. (ராய்ட்டர்)

கிழக்கு ஜெர்மனிக்கு நிதித்திட்டம்

டாக்டர் சொச்சட் தயாரிப்பதாக வந்த செய்திக்கு மறுப்பு

லண்டன், டிச. 20

ஹிட்லர் காலத்தில் ஜெர்மனியில் நிதிபகுதியில் இருந்த டாக்டர் எச். சொச்சட் என்பவர் கிழக்கு ஜெர்மனிக்கு ஒரு நிதித்திட்டம் தயாரிப்பதாக கூறப்பட்ட செய்கியை இன்று அதிகாரபூர்வமாக மறுக்கப்பட்டுள்ளது. இவர் அமெரிக்கப்பகுதிசிறைமுகாமில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் இவருக்கு எட்டு வருட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ராய்ட்டர்]

நாஷனல் லொசிஞ்சர் பிஸ்கெற்

நல்ல அனுபவம் வாய்ந்தவர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப் பெற்ற

லொசிஞ்சர்களும், பிஸ்கெற்றுகளும்

பாலர் முதல் வயோதிபர் வரை விரும்புவது

எங்கள் நாஷனல் லொசிஞ்சர்களும், பிஸ்கெற்களுமே.

மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலைக்கு எங்கும் கிடைக்கும்.

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்!

நாஷனல் கொன்பெக்ஷனரி கம்பெனி,
489, பெலிய கொட, கழனியா.
டெலிபோன்: கழனியா 35.

இரவெல்லாம் வர்த்தகப் பேச்சு

ஆங்கிலோ-யூகோ சம்பாஷணை

ரப்பர் மூலம் விமோசனம்

ஹாவனா, டிச. 19

62 நாடுகள்கூடி ஹாவனாவில நடத்தும் உலக வர்த்தக மகாநாட்டில் உலக வர்த்தக சாசனம் ஏற்படுத்தப்பட்டு உலக வர்த்தக ஸ்தாபன மொன்றும் நிறுவப்படும்.

ரப்பர் ஒப்பந்த விதி

வாஷிங்டன், டிச. 19

பிரிட்டனின் வேண்டுகோளின்படி ஜினிவா ஒப்பந்ததிலுள்ள ரப்பர் ஒப்பந்த விதியை அமுல் செய்வதை அமெரிக்கா தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறது. இது சம்பந்தமாக பின்னர் சமரசமான முடிவு செய்யப்படும்.

ரப்பர் மூலம் விமோசனம்

லண்டன், டிச. 19

இன்று காமன்ஸ் சபையில் வர்தகத மந்திரி பின்வருமாறு தெரிவித்தார்:-

அமெரிக்காமலேயாவிலிருந்து அதிக ரப்பர் வாங்குமாறு பிரிட்டனின் டாலர் பஞ்சத்திற்கு பெரிதும் நிவிர்த்தி ஏற்படும்.

டச்சுக்காரர் தந்திரம்

கன்சர் வேடிவ் கட்சி அங்கத்தினரும் ரப்பர் வர்த்தகருமான ஹிளச்சர் பின்வருமாறு கூறினார்:-

ரப்பர்விலையில் சிறிது ஏற்றம் ஏற்பட்டால்டாலர்பஞ்சமுள்ள நாடுகளுக்கும் அமெரிக்காவுக்குமே விமோசனம் ஏற்படும். டச்சு அரசாங்கம் சிங்கப்பூரில் ரப்பரை வாங்கி ஹாலந்துகுக்கொண்டு சென்று, அங்கருந்து டாலர் சம்பாதிக்க ரப்பரை ஏற்றுமதி செய்து வந்தது. இந்த வழக்கத்தை நிறுத்தும்படி பிரிட்டன்கேட்டுக்கொண்டது.

ஆங்கிலோ - சோவியத் ஒப்பந்தம்

மாஸ்கோ, டிச. 19

ஆங்கிலோ - சோவியத் வர்த்தக ஒப்பந்தம் அடுத்த வாரம் கைச்சாத்திடப்படும்

ஆங்கிலோ - சுவீடன் ஒப்பந்தம

லண்டன், டிச. 19

ஆங்கிலோ - சுவீடன் வர்த்தகப் பேச்சு திருப்திகரமாக நடந்து வருவதாக வர்த்தக மந்திரி காமன்ஸ் சபையில் அறிவித்தார்.

ஆங்கிலோ - யூகோ சம்பாஷணை

இன்று காலை 4 மணிவரை பிரிட்டிஷ் வர்த்தக தூதுகோஷ்டி யூகோஸ்லவியாவுடன் 11 மணி நேரம் சம்பாஷணை நடத்தியது சமரசமான ஒப்பந்தம் இன்னும் ஏற்படவில்லை இரவெல்லாம் பேசி விடிந்து விட்ட தால் ஜாகைகளுக்குத் திரும்பாமல் பிரதிநிதிகள் நாற்காலிகளிலிருந்தபடியே தூங்கினார்கள்.

ஆஸ்திரேலியாவிலிருந்து 8 கோடி புஷல் கோதுமை வாங்க பிரிட்டன் ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பதால் பிரிட்டன் இந்தவருடம் அமெரிக்காவிடம் கோதுமை கேட்க வேண்டியதில்லை யென்று உணவு மந்திரி தெரிவித்தார்.

சோவியத் யூனியனின் இரகசிய போலீஸ் படை

30 வருட காலசேவை

மாஸ்கோ, டிச. 20

சோவியத் யூனியனின் இரகசியப் போலீஸ படை "செகா" (ஆரம்பிக்கப்பட்ட) 30-வது வருடாந்தக் கொண்டாட்டம் இன்று நடைபெற்றது. பத்திரிகைச் செய்தியில் இந்த இரகசியப் போலீஸ படை பிரிட்டிஷ், பிரெஞ்சு, ஜெர்மனி, போலந்து ஜப்பான் முதலிய நாடுகளின் இரகசியப் போலீஸ படைகளிலும்பார்க்க சிறந்ததென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இரகசியப் போலீஸ படையின் 30 வருடகால சேவையில் இப்படைக்கு எதிராக ஏகாதிபத்திய நாடுகளின் இரகசியப் போலீஸ படைகள் எடுத்த நடவடிக்கைகள் ஒரு நிமிடங்காலும் கைவிடப்படவில்லை யென்று சோவியத்பத்திரிகை' ராவ்டா' எழுதுகின்றது (ராய்ட்டர்)

பிரிட்டிஷ் இராணுவ வீரர் கூட்டுக கொலை

பாலஸ்தீனம், டிச. 20

நேற்று நள்ளிரவுக்குப் பின் ஜாபா தெலாவில் எல்லையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு பிரிட்டிஷ் யுத்தவீரர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப் படுகிறது. அராபியரென்று எண்ணி யூத பாதுகாப்புபடையினர் சுடடதாக தெரிவிக்கப்படுகிறது. ஜெருஸலம் வர்த்தகப் பகுதியில் இன்று ஒரு சிறிய சுரங்கவெடி விபத்து ஏற்பட்டது.

இந்தியன் பாங்க் லிமிட்டெட்.,
(இந்தியாவில் இணைக்கப்பெற்றது, அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பெற்றது.)

1907ல் ஸ்தாபிக்கப்பட்டது. ரூ.
அதிகாரம் பெற்ற மூலதனம் 1,00,00,000
வசூலான மூலதனம் 72,00,000
அழைத்து செலுத்தப்பட்ட மூலதனம் 30-6-47 வரை ... 52,91,986
சேமிப்பு நிதி 62,00,000
டிப்பாசிட்டுகள் (19 கோடியே 40 லட்சத்திற்கு மேல்) 19,41,01,857

தலைமைக்காரியாலயம்: வடக்கு பிச்ரோடு, மதுரை.
மதுரை காரியாலயங்கள்:
எக்மோர், எல்பின்ஸ்டோன் மௌண்ட் ரோட், மைலாப்பூர், புரசவாக்கம், நியாகராயநகர், ட்ரிப்ளிகேன்.
தினகரம், சப் காரியாலயங்களும்:
ஆல்வார், ஆலப்புழை, பங்களூர் கன்டோன்மென்ட், பங்களூர் சிட்டி, பெஜவாடா, பீமாவரம், பம்பாய், கல்லிகோட்டை, கன்னனூர், கொச்சி, கோயம்புத்தூர், தேவகோட்டை, தேவாங்கிரி, திண்டுக்கல், எர்ணாகுளம், ஈரோடு, கவர்னர்பட், குடிவாடா, குண்டூர், குண்டூர் பஜார், காரைக்குடி, கோவூர், கோயில்பட்டி, கோட்டயம், கும்பகோணம், மதுரை, மங்களூர், மைசூர், நாகர்கோவில், நாகப்பட்டினம், நாச்சாரோடுபட், பாலகோல், பாலக்காடு, பள்ளத்தூர், பொள்ளாச்சி, புதுக்கோட்டை, புதுப்பட்டி, கொல்லம், ராஜமுந்திரி, ரெப்பாலி, சேலம், சீர்காழி, வெங்கடை, தடபெல்லகுடம், தஞ்சாவூர், தனுகு, தென்னாலி, திருநெல்வேலி, திருநெல்வேலி டவுன், திருப்பூர், திருவாரூர், திருச்சூர், திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம், தூத்துக்குடி, வேலூர், விருதுநகர்.
வெளிநாட்டு ஏஜண்டுகள்:
நேஷனல் சிட்டி பாங் ஆப் நியூயார்க், லண்டனிலும், நியூயார்க்கிலும்.
கொழும்பு காரியாலயம்:
14, பெயிலி வீதி, கோட்டை, கொழும்பு 1. போன்: 3402
மலாயா, சிங்கப்பூர், கோலாலம்பூர், பினாங்கு.
நடப்புக்கணக்கு, ஷேமிப்புக்கணக்கு, குறித்தகால, விசேஷகால டிப்பாசிட்களுக்கு முதலியவை நிதர்க்கப்பட்டு வட்டி வழங்கப்படுகிறது.
ட்ரப்ட்கள், டி. டி. கள் நியாயமான விதிகளில் வழங்கப்படுகிறது.
சகலவித வங்கித்தொழில்கள் வைராக்கியமாக நடத்தப்படுகிறது—விதிகள் விண்ணப்பித்து பெறலாம்.
ஏஜண்ட எஸ். கிருஷ்ணமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

கொழும்பு முனிசிபல் எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆன்மலம் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும்

சந்தா பின்வருமாறு:-

1	மாதம்	ரூ. 2-00
3	மாதம்	ரூ. 6-00
6	மாதம்	ரூ. 12-00
12	மாதம்	ரூ. 24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
194 A, பட்டாரத்தெரு,
கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, பட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

விலை சதம் 50 மார்கழி மீ 7 உ
திங்கட்கிழமை

நால்வர் மகாநாடு

நான்கு வல்லரசுகளின் அந்நிய நாட்டு மந்திரிகள் மகாநாடு மீண்டும் முறிந்து விட்டது பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி திரு. பெவின் இதற்குக் காரணம் ரஷியாதான் என்று பொதுமக்கள் சபையில் அறிவித்துள்ளார். ஐக்கிய அமெரிக்கா மார்ஷல் திட்டத்தால் ஐரோப்பாவிற்கு உதவி அளிப்பதாகவே கருதுகிறது. ஆனால் ரஷியா அதற்கிடமாக ஐரோப்பாவை அமெரிக்க ஆதிக்கத்தை ஏற்படுத்தும் எனக் குறைகூறி சுமத்துகிறது. பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியோ, அமெரிக்க ரஷிய பாதைகளைவிட்டு சுமுகமான நடுவழியைத் தேடியுள்ளார் இந்த நடுவான பாதை மார்ஷல்திட்டத்தை ஐரோப்பாவிற்கு உதவியாக அமைத்துக் கொள்ளுவதாகும். இக்கூறு ரஷியாவின் ஐயுறவுகளுக்கும் இடமுண்டு என்பதையும் திரு பெவின் மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் பிரிட்டிஷ் வழியில் மார்ஷல்திட்டத்தை ஏற்றுக் கொண்டால் ஐரோப்பிய நாடுகளுக்கு கதியோட்சம் கிடைத்துவிடும் என்பது அவரது திடமான நம்பிக்கை.

திரு பெவின் ரஷியாவின் பலமான நிர்ப்பந்தத்தால் தான் ஐரோப்பிய குடியரசு நாடுகள் மார்ஷல் திட்டத்தை ஆதரிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இக்குற்றச்சாட்டை நடுநிலைமை உள்ளவர்கள் ஒப்புக் கொள்ள முடியாது. காரணம்? இந்த நான்கு வல்லரசுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்த்து வைக்கக் கொள்ளுவதற்கு அக்குட்டி நாடுகளைக் கூப்பிடப்படாதமையேயாகும். பெரிய நாடுகள், முக்கியமான விஷயங்களில் எப்பொழுதும் சிறிய நாடுகளைத் தூர நிலையே வைத்துக் கருமங்களை ஆற்றிவருகின்றன. வல்லரசுகள் தமக்கிடையே சண்டை, சச்சரவுகள் இருந்தாலும், தங்கள் பிரதிநிதியேகதானங்களை பாதுகாத்தே வருகின்றார்கள். பரஸ்பர ஒற்றுமை ஏற்படாதமைக்கு இதுவே மூலாதார காரணம்.

திரு பெவின், ரஷியா தனது அடைநாடுகளை நிர்பந்தப்படுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டலாம். ஆனால் ஒவ்வொரு வல்லரசும் இதையே செய்து வருகின்றது என்பது எவருக்கும் தெரியும். நேசதேச ஸ்தாபனமே இந்த ரீதியில்தான் அமைக்கப்பட்டது என்று திடமாகச் சொல்லமுடியும். அரசுகளுக்கு சம அந்தஸ்து இருக்கவேண்டும் என்னும் கொள்கையான இன்று நேசதேச ஸ்தாபனத்திற்கு எதிர்ப்பு உண்டாகவில்லை. அரசுகளுக்கு உயர்ஸ்தானம் வேண்டும் என்னும் கொள்கைதான் நே. தே. ஸ்தாபனத்திற்கு எதிர்ப்பை அமைக்க முனைந்துள்ளது. இந்நிலைமை மாறியவேண்டும்.

வல்லரசுகள் பரஸ்பர நல்லெண்ணத்துடன் யாவருக்கும் சமம் என்னும் எண்ணங்கொள்ளவேண்டும். இந்த நிலைமை ஏற்படும்வரைக்கும் எந்தத் நடடமும், ஒற்றுமையும் உருவாக மாட்டாது.

இந்தியா-பாகிஸ்தான் அகதிகள் கஷ்ட நிவாரண நிதி

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் வேண்டுகோள்

கொழும்பு, டிச. 2

பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கை கிளை சங்கத்தின் தலைவி லேடி மூர் நுவரேலியா "க்வீன்ஸ் காட்டேஜ்"லிருந்து விடுத்துள்ள வேண்டுகோளில் பின்வருமாறு தெரிவிக்கிறார்:-

இந்தியா, பாகிஸ்தான் அகதிகளின் கஷ்ட நிவாரண நிதிக்கு உதவும்படி பிரிட்டிஷ் செஞ்சிலுவை சங்கத்தார் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பிரிட்டிஷ் சங்கத்தின் கிளையானபடியால் இலங்கையிலுள்ளவர்களும் இந்தியா-பாகிஸ்தான் அகதிகள் கஷ்ட நிவாரணத்திற்கு உதவும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கீழ்க்கண்ட விலாசத்திற்குப் பணம் அனுப்பி வைக்கலாம்:-

பொக்கிஷதார், செஞ்சிலுவைச் சங்கம், 106, டரடரோட, கொழும்பு

"இந்தியா-பாகிஸ்தான் வேண்டுகோள்" என்று குறிப்பிடவும். பொக்கிஷதார் சாஜன்ட்பர் பணத்தைப் பெற்றுக்கொண்டு பணம் அளித்தவர்கள் பெயரும் தொகையுமுள்ள பட்டியலை பிரசுரம் செய்வார்.

தோட்டத் துரைமார் படை

நீடித்திருக்க அரசாங்கம் அனுமதியளிக்கும்

கொழும்பு, டிச 23

இலங்கை தோட்டத் துரைமார் சபையின் படையைத் திருத்தியமைப்பதுபற்றி பாதுகாப்பு இலாகா ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. இத்தொடர்பாக பிரதம மந்திரியையும் அப்படையின் தலைவர்களையும் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. வகுப்புவாரியான சங்கங்களின் படைகளுக்கு அங்கீகாரமளிக்கலாகாது என்பது அரசாங்கத்தின் கொள்கையென்ற போதிலும், இந்த குறிப்பிட்ட சம்பந்தமாக விதிவிலக்கு அனுஷ்டிக்கப்படுமென்று தெரியவருகிறது. இப்படையில் ஐரோப்பியர்கள் பட்டமே இருக்க வேண்டுமென்று விரும்பினால் அவ்விதம் செய்ய அப்படைக்கு அனுமதியளிக்கப்படும். ஆனால் அப்படை மற்றப் படைகளுடன் சேர்ந்து படவடிக்கை எடுக்கும்போது அதற்கு விசேஷ சலுகை கோரப்படமாட்டாதென்ற நிபந்தனையின் மீது இவ்வாறு அனுமதியளிக்கப்படும். வகுப்பு சம்பந்தமின்றி தொழில் சம்பந்தமாக அதாவது எல்லா வகுப்புகளையும் சேர்ந்த தோட்ட முதலாளிகள் இப்படையில் சேரவேண்டுமென்றும் நிபந்தனை விதிக்கப்படும்

தமிழ்நாடு மாகாண அரசியல் மகாநாடு

ஒத்தி வைக்கப்பட்டதாக ஸ்ரீ காமராஜ் அறிக்கை

சென்னை, டிச 2

தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி தலைவர் ஸ்ரீ கே.காமராஜ் தமிழ்நாடு மாகாண அரசியல் மகாநாடு ஒத்து வைக்கப்பட்டிருப்பதைத் தெரிவித்து, நேற்று ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது,-

1948 ஜனுவரி 4, 5 தேதிகளில் கோவையில் நடக்கவிருக்கும் 43 வது தமிழ் நாடு மாகாண அரசியல் மகாநாடு, மகாநாட்டுக்கான ஏற்பாடுகள் 4-ம் தேதிக்குள் முடிவடையாதென்பதற்காக ஜனுவரி 17, 18-ம் தேதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது

இதுவரை விளைவாக தலைமை பதவிக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கும் அர்ஜிதாரர்கள் பதிநாலு கடைசி வாபஸ் வாங்க வேண்டிய கடைசி தேதி டிசம்பர் 30-ம் தேதி காலை 11 மணிக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது:

தேர்தல் இருக்கும் பட்சத்தில் ஜிலா காங்கிரஸ் கமிட்டிகளுக்கு வோட்டு பதிவு செய்ய ஜனுவரி 7-ம் தேதி கூடும். முடிவு அறிவிக்கப்பட்டபடி டிசம்பர் 6-ம் தேதி கூடாது.

யாழ்ப்பாணத்தில் சித்தவைத்தியக் கல்லூரி நிறுவ வேண்டும்

கொழும்புக்கு ஸ்ரீலங்கா ஆயுர்வேத வித்யாலயம்

சுதேசவைத்தியத்தைப் பரவச்செய்வதற்கு சிபார்சுகள்

டாக்டர் தாஸ்குப்தா அறிக்கை பிரசுரம்

கொழும்பு, டிச. 22

ஆயுர்வேத வைத்திய முறையில் கல்வி பயிற்றுவிக்க கொழும்பில் ஒரு கல்லூரியும், சித்தவைத்திய முறையில் கல்வி பயிற்றுவிக்க யாழ்ப்பாணத்தில் ஒரு கல்லூரியும் நிறுவப்படவேண்டுமென்று சுதேச வைத்தியக் கல்வி யமைப்பைச் சீர்திருத்துவதற்காக நியமிக்கப்பட்டிருந்த சுதேச வைத்தியக் கல்விக் கமிஷன் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் சிபார்சு செய்திருக்கிறது,

யூனுன் வைத்திய முறைக் கல்வி போதிக்கப்படுவதை நிறுத்திவிடலாமென்றும், ஆயுர்வேதக் கல்வி சிங்களத்திலும் சித்த வைத்தியக் கல்வி தமிழிலும் போதிக்கப்படும்போது, யூனானி வைத்தியக் கல்வி ஆங்கிலத்தில் முஸ்லிம்களுக்குப் போதிக்கப்பட்டு வருகிறதென்றும், யூனானிவைத்தியம் சுதேசவைத்தியமில்லாதபடியால், யூனுன் வைத்தியக் கல்வி அவசியமில்லையென்றும், யூனானி முறையில்பயில விரும்புமாணவர்களை அரசாங்கம் உபகாரச் சம்பளம் கொடுத்து இந்தியாவில் படித்துவர ஏற்பாடுசெய்யலாமென்றும அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது கமிஷன் அங்கத்தினரில் ஒருவரான திரு. எஸ். நடேசன் இதை ஒப்புக்கொள்ளவில்லை.

இக்கமிஷன் 1946 நவம்பர் முதல் தேதி நியமிக்கப்பட்டது அதன் தலைவர் கவிராஜ் டாக்டர் எம். எல். தாஸ்குப்தா அங்கத்தினர்கள்:- திரு. பி. டி. எஸ். குலரத்ன, திரு. எஸ். நடேசன், பண்டிட் ஜி. பி. விக்ரமாராச்சி,

முக்கிய கமிஷன் செய்துள்ள 50 சிபார்சுகளின் சாராம்சம் பின் வருமாறு:-

ஆயுர்வேத வைத்தியக் கல்விக்கு கொழும்பில் ஸ்ரீ லங்கா ஆயுர்வேத வித்தியாலயம் என்ற கல்லூரி நிறுவப்படவேண்டும். சித்த வைத்தியர் கல்விக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு கல்லூரி நிறுவப்படவேண்டும். யூனானி வைத்தியக் கல்வி தேவையில்லை யூனானி வைத்தியகல்வி பயில விரும்பும் மாணவர்கள் இந்தியாவிலிருக்கும் சிறந்த யூனானி வைத்தியக் கல்லூரிக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து அனுப்பி வைக்கலாம். முஸ்லிம் மாணவர்கள் கொழும்பிலுள்ள ஆயுர்வேதக் கல்லூரியிலும் யாழ்ப்பாணத்திலுள்ள சித்த வைத்தியக் கல்லூரியிலும் பயில வசதி அளிக்கப்பட வேண்டும்.

இந்த கல்லூரிகளிலும் சேர விரும்பும் மாணவர்களின் யோக்கியதாம்சதரம் உயர்த்தப்பட வேண்டும் பிரவேசப் பரீட்சை நடத்தி அதில் தேறியவர்களை கல்லூரிகளில் படிக்க அனுமதிக்க வேண்டும் 5வது காலம் கல்வி பயில வேண்டும். 6 மாத காலம் வைத்தியசாலை ரீதியில் அனுபவப் பயிற்சி பெற வேண்டும். ஆயுர்வேதம், சித்த வைத்தியம், நவீன வைத்திய சாஸ்திர முறைக் கொள்கைகள் இவைகளில் கல்வி போதிக்கப்பட வேண்டும் அதோடு சாதாரணமான சதரசிகிச்சை முறைகள், பிரசவ வைத்திய முறைகள் போதிக்கப்பட வேண்டும். தகுதியுள்ள ஆசிரியர்களைக் கொண்டு ஒவ்வொரு பகுதியும் சரியானபடி அமைக்கப்பட வேண்டும்.

நான்கு பரீட்சைகள்

நான்கு பரீட்சைகள் நடத்த வேண்டும் கடைசிப் பரீட்சையில் தேறி 6 மாத அனுபவ பயிற்சியும் பெற்றபின் பட்டங்கள் வழங்கப்பட வேண்டும் வைத்தியர்கள் சங்கம் வைத்தியப் பத்திரிகை ஏற்படுத்தி நடத்த ஊக்கமளிக்கப்பட வேண்டும்.

வைத்திய விசாரதா என்ற பட்டங்கள் வழங்கப்பட வேண்டும் சிறந்த நூலகமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். தக்க மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்க வேண்டும் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் படிக்கும் மாணவர்களுக்கு சிங்களத்திலும், தமிழிலும் பாடப் புத்தகங்கள் இயற்றப்பட வேண்டும் அதற்காக பாடப்புத்தக கமிட்டியொன்று நிறுவப்பட வேண்டும்.

வைத்தியசாலைகள்

ஆயுர்வேத முறைப்படி நோயாளிகள் சிகிச்சை பெறவும் கல்லூரி மாணவர்கள் பயிற்சி பெறவும் வெளியிலிருந்து 1000 நோயாளிகள் வந்து சிகிச்சை பெறவும் உள்ளிருந்து 600 நோயாளிகள் சிகிச்சை பெற படுக்கைகளும் வசதியுள்ள ஒரு பெரிய வைத்திய சாலை நிறுவப்பட வேண்டும். அதே போன்று யாழ்ப்பாணத்தில் 500 நோயாளிகள் வெளியிலிருந்து வந்து சிகிச்சை பெறவும் 200 படுக்கைகளையுடையதுமான சித்த வைத்தியசாலை ஏற்படுத்த வேண்டும். அவைகளுக்குத் தகுந்தபடி சிப்பந்திகளை நியமிக்கப்பட வேண்டும் ஆங்கில வைத்திய முறை தேவையான அளவுக்கு மட்டும் அனுமதிக்கப்படலாம் இவ்விரு கலாரிகள் அபிவிருத்தியடைந்ததும் இலங்கையெங்கும் வைத்தியசாலைகள் நிறுவப்பட வேண்டும். பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் தான் தொழில் நடத்த அனுமதிக்கப்பட வேண்டும். மருந்துகள் தயாரிக்க ஒரு மத்திய வைத்திய சாலை ஏற்படுத்தப்பட வேண்டும் மருந்துகளின் விநியோகத்தை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும் வைத்தியர்கள் சங்கம் வைத்தியப் பத்திரிகை ஏற்படுத்தி நடத்த ஊக்கமளிக்கப்பட வேண்டும்.

"குவிஸலிங் போன்றவர் பர்மாவிலும் இருக்கின்றனர்"

பர்மா பிரதம மந்திரி கூற்று

ரங்கூன், டிச 20

தங்களுக்குப் புதிதாகக் கிடைத்த சுதந்திரத்தைச் செவ்வனே பாதுகாக்க வேண்டுமென்றும் குவிஸலிங் போன்ற தேசத் துரோகிகள் பர்மாவிலிருக்காலத்திலும் இருப்பதால் பர்மா மக்கள் எச்சரிக்கையாகவிருக்க வேண்டுமென்றும் பர்மா பிரதம மந்திரி தக்கின் நூ இன்று கூறினார். "சுதந்திரத்தை எப்படிப்பட்டு அடைந்தோமோ அவ்வளவு கஷ்டப்பட்டு அதைப் பேணவும் வேண்டியிருக்கிறது" என்றும் கூறினார்.

நாட்டில் செல்வாக்கில்லாத சில போலித் தலைவர்களைப் பற்றி பர்மா மக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமென்றும் இவர்கள் அந்நிய முதலாளிமான தூண்டுதலால் பர்மாவின் முற்போக்கைத் தடுக்கவும் கூடும் என்றும் கூறினார்.

(ராய்ட்டர்)

ராஜன்பாபுவுக்கு பிரமாத வரவேற்பளிக்கவுறபாடு

ரங்கூன், டிச 19

ஜனவரி முதல் வாரத்தில் நடைபெறவிருக்கும் பர்மா சுதந்திரக் கொண்டாட்டங்களிலலந்து கொள்ள இந்திய காங்கிரஸ் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரஸாத் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவருக்குப் பிரமாதமான வரவேற்பு அளிக்க ரங்கூன், ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறது.

பர்மிய, சீன, இந்திய தலைவர்கள் ஒரு வரவேற்பு வைபவத்துக்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். ராஜன் பாபுவுக்கு அவர்கள் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிப்பார்கள்.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காக லார்ட் மௌண்ட் பேட்டன் வருவாரென டர்மிப் பத்திரிகைகளில் செய்தி பிரசுரமாகியிருக்கிறது.

வருடத்திற்கு 75 சினிமா படங்கள்

உற்பத்திசெய்ய பிரிட்டன் முஸ்தீபு

லண்டன், டிச 20

வர்த்தக மந்திரி இன்று காமன்ஸ் சபையில் பேசியபோது பிரிட்டனிலுள்ள சினிமா ஸ்டுடியோக்கள் வருடத்திற்கு 75 சினிமா படங்களை உற்பத்தி செய்யத் திட்டம்போட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

துருக்கி-பாகிஸ்தான் வர்த்தகப் பேச்சு

ஸ்தாம்புல், டிச. 21

பாகிஸ்தான் வர்த்தக கார்பொரேஷன் தலைவர் அகமது ஜாபர் வர்த்தகம், நிதி, கைத்தொழில சம்பந்தமாக துருக்கி தலைவர்களுடன் சம்பாஷணை நடத்தவருகிறார். இன்னும் சில தினங்களில அவர் இங்கிருந்து இங்காராவுக்குப் பயணமாவார்.

அமெரிக்காவில் மோட்டார் கார் விலை ஏற்றம்

டெட்ராயிட், டிச 20

அமெரிக்காவில் மோட்டார் கார்களின் விலை சென்றவருடத்தைவிட நூற்றுக்கு 6.8 சதவிகிதம் விலையேறிவிட்டது என்று அமெரிக்க மோட்டார் கார் உற்பத்தியாளர் சங்கத்தார் அறிவித்துள்ளார்.

சிரியாவில் காலரா?

டமாஸ்கஸ், டிச 20

சிரியாவின் தலைநகரமான டமாஸ்கஸ் என்னும் இத்தலத்துக்கருகாமையிலுள்ள 3 கிராமங்களில் பலர் காலரா நோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர் என்ற சந்தேகத்தின்பேரில் அப்பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான ஆடுகளை ஒரு புக்கொள்ளவில்லை.

இக்கமிஷன் 1946 நவம்பர் முதல் தேதி நியமிக்கப்பட்டது அதன் தலைவர் கவிராஜ் டாக்டர் எம். எல். தாஸ்குப்தா அங்கத்தினர்கள்:- திரு. பி. டி. எஸ். குலரத்ன, திரு. எஸ். நடேசன், பண்டிட் ஜி. பி. விக்ரமாராச்சி,

முக்கிய கமிஷன் செய்துள்ள 50 சிபார்சுகளின் சாராம்சம் பின் வருமாறு:-

ஆயுர்வேத வைத்தியக் கல்விக்கு கொழும்பில் ஸ்ரீ லங்கா ஆயுர்வேத வித்தியாலயம் என்ற கல்லூரி நிறுவப்படவேண்டும். சித்த வைத்தியர் கல்விக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு கல்லூரி நிறுவப்படவேண்டும். யூனானி வைத்தியக் கல்வி தேவையில்லை யூனானி வைத்தியகல்வி பயில விரும்பும் மாணவர்கள் இந்தியாவிலிருக்கும் சிறந்த யூனானி வைத்தியக் கல்லூரிக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து அனுப்பி வைக்கலாம். முஸ்லிம் மாணவர்கள் கொழும்பிலுள்ள ஆயுர்வேதக் கல்லூரியிலும் யாழ்ப்பாணத்திலுள்ள சித்த வைத்தியக் கல்லூரியிலும் பயில வசதி அளிக்கப்பட வேண்டும்.

இந்த கல்லூரிகளிலும் சேர விரும்பும் மாணவர்களின் யோக்கியதாம்சதரம் உயர்த்தப்பட வேண்டும் பிரவேசப் பரீட்சை நடத்தி அதில் தேறியவர்களை கல்லூரிகளில் படிக்க அனுமதிக்க வேண்டும் 5வது காலம் கல்வி பயில வேண்டும். 6 மாத காலம் வைத்தியசாலை ரீதியில் அனுபவப் பயிற்சி பெற வேண்டும். ஆயுர்வேதம், சித்த வைத்தியம், நவீன வைத்திய சாஸ்திர முறைக் கொள்கைகள் இவைகளில் கல்வி போதிக்கப்பட வேண்டும் அதோடு சாதாரணமான சதரசிகிச்சை முறைகள், பிரசவ வைத்திய முறைகள் போதிக்கப்பட வேண்டும். தகுதியுள்ள ஆசிரியர்களைக் கொண்டு ஒவ்வொரு பகுதியும் சரியானபடி அமைக்கப்பட வேண்டும்.

நான்கு பரீட்சைகள்

நான்கு பரீட்சைகள் நடத்த வேண்டும் கடைசிப் பரீட்சையில் தேறி 6 மாத அனுபவ பயிற்சியும் பெற்றபின் பட்டங்கள் வழங்கப்பட வேண்டும் வைத்தியர்கள் சங்கம் வைத்தியப் பத்திரிகை ஏற்படுத்தி நடத்த ஊக்கமளிக்கப்பட வேண்டும்.

மனைவியுடன் சேர்ந்திருக்க கணவனுக்கு தடை

செயற்கை முறையை கையாளவேண்டும்

லண்டன், டிச 21

புருஷனுடன்சேர்ந்து குடும்ப வாழ்க்கை நடத்துவதை ஒரு ஸ்திரீ ஆக்ஷேபித்தாளாம். தனுடன் கணவன் சேர்ந்து வாழ கர்ப்பத்தடை கருவியை அணிந்துகொள்ள வேண்டுமென்று அவள் நிபந்தனை போட்டாளாம்

இதன்பேரில் இந்த ஸ்திரீயின் கணவர் பிரபுக்கள் சபையிலிருக்கிற லார்டு சான்ஸலர் லைகௌண்ட் அவிபீட் தீர்ப்பு கூறுகையில் இவ்வழக்கை தள்ளிவிட்டார். இந்தீர்ப்பை கண்டு கதிதோலிக்க விவாக ஆலோசனை கௌன்ஸில் வியப்படைந்திருக்கிறது.

மேற்படி கௌன்ஸிலின் சேர்மன் ஸ்ரீ கிரகாம் கிரீஸ்ராய்ட்டர் நிருபரிடம் கூறியதாவது:-

கர்ப்பத்தடை கருவியை உபயோகிக்க வேண்டும் என்று ஸ்திரீகளின் உரிமையை ஆதரித்து பிரபுக்கள் தீர்மானித்திருக்கின்றனர். ஆனால் நமது தர்மங்கள் வேறு. ஆயிரக்கணக்கான ரப்பர் கருவிகள் மக்களுக்கு விற்கப்படுவதை அறிவோம். ஆனால் இதன் உபயோகம் உயிர்க்கே அபாயமாகும். இவ்விஷயமிருந்தும் ஸ்திரீகள் தீட்டாகும்போது கர்ப்பத்தடை அனுசரித்ததால் அதை கதிதோலிக்க சர்ச் எதிர்க்காது

இந்திய யூனியனுக்கு எதிராக சதி

அலகாபாத், டிச, 21

ஐக்கியமாகாணத்தில் லீக்கள் அனைவரும் தங்கள் விஷமத்தை நிறுத்தவில்லை. நேற்று கோரக்பூரில நகரஜில்லா முஸ்லிம் லீக் காரியாலயங்களையும் சிலமுக்கியமானலீக்காரர்களின் வீடுகளையும் தீவைத்தனர் சோதனை போட்டதில் இது தெரிய வந்தது. பாகிஸ்தானிலிருந்துவந்த சில முக்கியமான தஸ்தாவேஜுகள் கைப்பற்றப் பட்டன அவை இந்திய யூனியனுக்கு எதிராகச் செய்யவிருந்த சதியில் இவருள்ள சில பெரிய அதிகாரிகளை சம்பந்தப்படுத்துகின்றன பெற்றுக்கொண்டு சோதனை நடக்கலாம்

கல்கத்தாவில் ஒலிபரப்பிகள் கைப்பற்றபட்டன

கலகத்தா, டிச 20

இன்று செபூர் பகுதியில் போலிசார் சோதனையிட்டதில் மூன்று ஒலிபரப்பிக் கருவிகளும் இதர சாமான்களும் பிடிபட்டன கல்கத்தாவிலிருந்து கள்ளத்தனமாக ஆயுதங்கள் கொண்டு போகப்படுகின்றன என்று தக்க நம்சாட்சியங்களும் போலிசாருக்குக் கிடைத்திருக்கின்றன வீட்டிலிருந்த ஒரு முஸ்லிம் கைது செய்யப்பட்டார்.

இந்திய முஸ்லிம்கள் யூதர் போலாக வேண்டுமாம

கராச்சி, டிச 20

பாலஸ்தீனத்திலுள்ள யூதர்களைப்போன்று இந்திய யூனியனிலுள்ள முஸ்லிம்கள் தங்களைத் தரட்டிக்கொள்ள வேண்டுமென்று ஸ்ரீ ஜின்னா இந்திய முஸ்லிம்களுக்கு உபதேசம் செய்தாராம் இது உண்மையானால் வருந்தத்தக்கது என்று "டெயிலி கெஜட்" இன்று எழுதியுள்ள தலையங்கத்தில் கூறுகிறது. இந்திய முஸ்லிம்கள் இந்த உபதேசத்தைப் பின்பற்றினால் அவர்களுக்கு பேராபத்து என்று அப்பத்திரிகை எச்சரிக்கிறது.

எலிஸபெத் இளவரசியின் நலிகொடை

லண்டன், டிச. 20

இளவரசி எலிஸபெத்துக்கு கலியாண பரிசாகக் கிடைத்த பணத்தில் அதிகப் பங்காகிய பதினமூவாயிரம்பவுண் தருமத்திற்குச் செலவிடும்படி அவர் கொடுத்திருக்கிறார் என பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து இன்றிரவு வெளியான ஒரு செய்தி கூறுகிறது (ராய்ட்டர்)

தேர்தல் கலக எதிரொலி

6 சிறுவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிச. 21

பொதுத் தேர்தலில் கொழும்பு தெற்குத் தொகுதிக்கு நேற்றுத் தேர்தல் நடைபெற்று முடிவு தெரிவிக்கப்பட்டபோது தோல்வியுற்ற அபேட்சகர் திரு. பி. சரவணமுத்து வீட்டருகே கலகம் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 6 சிறுவர்களை மாஜிஸ்திரேட் எச்சரித்து அவர்களைப் பற்றிய வரலாற்றை ஜனவரி 10-ம் தேதிக்குள் அறிவிக்கும்படி புரொமோஷன் ஆபீசருக்கு உத்தரவிட்டார்.

இதே குற்றத்திற்காக மற்றும் 18 பேர்கள் மீது தொடரப்பட்டிருக்கும் வழக்கு பின்னர் விசாரிக்கப்படும்.

கண்டி, டிச. 20

கண்டி ஹோட்டல் கம்பெனிக்கும் அரசாங்கத்துக்கும் நடைபெற்று வரும் சமரசப் பேச்சுகள் வெற்றி பெற்றன, இப்பொழுது வாடகைக்கு அமர்த்தப்படுள்ள அரசாங்க கந்தோர்கள் இனி சுசி ஹோட்டல் கட்டிடத்திற்கு மாற்றப்படும்.

மீன் விற்பனை வசதி போர்டு

திட்டத்தை மீன்பிடி தொழிலாளர் சங்கம் ஏற்றுக் கொண்டது

விலை வாசிகளை முடிவு செய்வது பற்றி ஏற்பாடு

கொழும்பு, டிச 22

திரு ஆர் எல். பாசட் விடுத்துள்ள மீன் விற்பனை வசதி போர்டு திட்டத்தின்கொள்கை பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டபோதிலும் அது உடனே அமுல் செய்யப்படமாட்டாது. மீன்பிடிப் போர் சங்கங்கள் இதைப்பற்றி ஆலோசனை செய்து அபிப்பிராயம் தெரிவிக்கும்வரை இத்திட்டம் அமுல் செய்யப்படமாட்டாது

நேற்று முன்னினம் கூட்டுறவு அபிவிருத்தி ரிஜிஸ்தார் காரியாலயத்தில் மீன்பிடி கூட்டுறவு சங்கத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் நடைபெற்றபோது மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

மீன்பிடி தொழில் அரசாங்க உடமையாக்கவதுபற்றி மீன்பிடி தொழிலாளர்கள் எதிர்க்கிறார்கள். ஆனால் பிடித்தமீன்களை விற்கும் உரிமை அரசாங்க உடமையாக்கப்படலாம் என்பதற்கு இணங்குகிறார்கள் இத்தொழிலுக்கு வேண்டிய நூல், படகுத்திரை, கடன்கள்முதலியவைகளின் நிர்வாகம் மீன்பிடி தொழில் டைரக்டரிடமிருக்கலாகாதென்றும் புதிதாக நிறுவப்படும் மீன் விற்பனை வசதி போர்டின் நிர்வாகத்திலிருக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கம் விசைப்படகொன்றை வாங்கி தொழிலாளர் வசம் ஒப்புவிக்க வேண்டுமென்றும் நஷ்டம் ஏற்பட்டால் சர்க்கார் பணஉதவி செய்ய வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி டைரக்டர் திரு. எஸ் பெர்னாண்டோ பின்வருமாறு தெரிவித்தார்:- விற்பனை வசதி போர்டு தொழிலாளர் பிடிக்கும் மீன்கள் அனைத்தையும் விலைக்கு வாங்கும், அதை விநியோகம் செய்யும் முறையை அந்த போர்டு தீர்மானிக்கும். விலை வாசிகள் சம்பந்தமாக மீன் பிடிப்பவர் மீன் வாங்குவோர் அரசாங்கம் ஆகியோர் கலந்து முடிவு செய்வார்கள்.

தபால் கந்தோரில் திருடர்கள்

கல்கிசை, டிச 21

கல்கிசை தபால் கந்தோரின் வாசல் கதவைத் திறந்து கொண்டு திருடர்கள் உட்புகுந்தபோது போஸ்ட் மாஸ்டர் உஜாராகவே திருடர்கள் ஓடிவிட்டனர். அவர்கள் கை ரேகை அடையாளங்கள் பதிந்திருந்தபடியால் இரகசிய போலிசார் அவைகளைக் கொண்டு திருடர்களைக் கண்டு பிடிக்க முயற்சித்து வருகிறார்கள்.

ரிக்ஷா இழுத்து எம். ஏ. பட்டம்பெற்ற வாலிபர்

காசி, டிச 20

நேற்று நடைபெற்ற காசி சர்வ கலாசாலை பட்டமளிப்பு விழாவின்போது எம். ஏ. பட்டம் பெற்றவர்களில் ஒருவர் தமது ஏழ்மையிலும் எப்படி கலாரி படிப்பு படித்து வந்தார் என்ற விவரம் வெளியாகியது. இந்த வாலிபர் தாம் எப்படியும் எம் ஏ. பட்டம் வாங்கிவிட வேண்டுமென்ற ஆர்வத்தில் ரிக்ஷா இழுத்து அதில் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு தனது கலாரி சம்பளத்தைக் கட்டி வந்திருக்கிறார். மெட்ரிகுலேஷன் பரீட்சை தேறியதும் வறுமையினால் வாடின இந்த இளைஞர் கலாரியில் சேர்ந்தார். ஆனால் படிப்பு செலவுக்கு அவர் கையில் பணமில்லை. எனினும் எப்படியாவது கலாரியில் படிப்பது என்று மன உறுதி கொண்ட இவர், ரிக்ஷா ஒன்றை வாடகைக்கு அமர்த்தி தமது 6 வருஷ கலாரி வாழ்நாட்களில் ஒவ்வொரு இரவிலும் இந்த ரிக்ஷாவை இழுத்து அதில் கிடைத்த பணத்தை படிப்பிற்கு செலவிட்டார். ரிக்ஷாவுக்குரிய வாடகை கட்டிய பின் ஒவ்வொரு நாள் இரவிலும் இவருக்கு சராசரி ரூ. 3 கிடைத்து வந்ததாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

பள்ளிச் சிறுர்களின் புத்த நாடகத்தில் பண்டார நாயக்கா 'பத்திரிகையின் சீற்றம்

பம்பாய்ச் சம்பவம் இங்கு வேண்டாமாம்

பகிரங்க மன்னிப்பே வேண்டுமாம்

ஸதல - ஸ்தாபன மந்திரி கொண்ட ஸ்ரீ விஷ்ணு, கரடி திரு பண்டாரநாயக்காவன் "சிங்கள பௌய" என்னும் வார வெளியீடு. தனது 20-12-47 இதழில் எழுதியிருக்கும் ஆசிரியத தலையங்கததின் தமிழாக்கம்.

சில காலத்திற்கு முன் புத்தரின் சரித்திரத்தை சினிமாப படமெடுக்க, ஒரு இந்திய சினிமாக் கம்பெனி முயற்சி செய்தது. எனினும், "சிங்கள பௌய" பத்திரிகை முதலாக பௌத்த மக்களும் எடுததுக் கொண்ட தகுந்த நடவடிக்கை காரணமாக புத்தரின் நிர்மலமான சரித்திரத்திற்கும் சம்புத்த சாஸனத்திறகும் ஏற்பட விருந்த அவமானம் தடுக்கப்பட்டது. இததடன், புத்தரின் சரித்திரத்தை சினிமாப் படமெடுக்கும் எண்ணமும் முயற்சியும் கைவிடப்பட்டிருந்தது.

எனினும், பௌத்த உலகத்தின் பலம் பொருந்திய கோட்டையாக சம்புத்தசாஸனத்தின் நிர்மலமான கோட்பாடுகளை இன்னும் காப்பாற்றி வருபவை இந்த ஸ்ரீ சிங்கள தீவிபத்தில் அன்றவிடப்பட்ட விளையாடு நடந்திருப்பதாக இந்த வாரம் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியிலிருந்து தெரிகிறது அதாவது, யாழ்ப்பாணக் கலாசாலையில் நாடகமாக நடிக்கப்பட்ட செய்தியாகும். இந்த நாடகத்தின பெயர் "புத்தரின் கருணை" (புதுநகே கருணுவ) என்றும், இதை எழுதியவர் சுத்தானந்த பாரதி எனபவர் என்றும், மேலும் அச்செய்தி கூறுகிறது இது வெறுமனே நடக்கவில்லை புதரின் வாழ்க்கையை நிரூபணமாகக் கொண்ட இந்த நாடகத்தில், புதரின் பாகத்திற்கு ஸ்ரீ பரமேஸ்வரம் எனனும் யாழ்ப்பாணத் தமிழனுடன் வேறு பெண் நடிகைகளும் கலந்து நடித்தனரென்றும், யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சிங்களப் பௌத்தரின் தங்கப் பதக்கத்தை மேற்படி நடிகர் பரிசாகப் பெற்றுரென்றும் அகிலண்டேஸ்வரி, விமலாதேவி எனனும் யுவதிகளும் நடிகைத்திறமைக்காக தங்கப் பதக்கங்கள் பரிசாகப் பெற்றன ரென்றும தொடர்ந்து அச்செய்தி கூறுகிறது.

மூன்கூட்டியே ஒழுங்கு செய்யப்பட்டு நடிக்கப்பட்ட இந்த நாடகத்தில் புத்தபிரானின் பாகத்திற்கு ஒருகோழைததமிழன் நடிப்பதென்றால், அதுவும் இந்த ஸ்ரீ சிங்கள தீவிபத்திலே இந்த விளையாட்டு நடக்கிறதென்றால், முழுச் சிங்கள சமூகத்திற்கும் அகில பௌத்த உலகத்திற்கும் வேண்டுமென்றே செய்யப்பட்ட நிந்தனையும் இழிவுமென்றே சொல்ல வேண்டும். புதரின நிலை ஏறபடும வரை மாத்திரம் புதத சரி திரதததைசினிமாப்படம் பிடிபபதை இலங்கை பௌதர்கள் எதிர்தமேத இருக்கிறுர்களென்பது பகிரங்கம். ஆனபடியால், இச்சமபவம் அறியாமையினுலோ அல்லது மூடத்தனததினுலோ செய்யப்பட்ட சமய சமபந்தமான அவமானமென்று ஏற்றுக்கொள்ள இட மில்லை.

இங்கே குற்றத்திற்கு இடமென்ன வென்றால், புத்தபிரானின் நிர்மலமான கோட்பாடுகளைப்பின்பற்றும்பௌத்த உலகத்திற்கு வழிகாட்டிகளாக விருக்கும சிங்கள பௌததர்களுக்கு இழிவும் பரிகாசமும் செய்யும் நோக்கததுடன் செய்யப்பட்ட விளையாடென்று எண்ணுவது மாத்திரம் தான்.

பெண்களைத் தோள்மேலேற்றிக்கொண்ட ஸ்ரீ விஷ்ணு கோபிகா ஸ்திரீகள் ஜலக்கிரீடை செய்யும்பொழுது, அவர்களின நிர்வாண நிலையைத் தரிசனம் செய்வதற்காக ஆடைகளைக் கவர்ந்து சென்று மரமேலேறிக் கொண்ட ஸ்ரீ விஷ்ணு, கரடி வேட்டைக்குச் செலவதைபோன்று திரிசூலம் கையிலேந்திய சிவன் முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களும தாசிகளின் ஆடல்பாடல்களைக் கண்டு மகிழ்ந்தார்களென்று அவர்கள் எப்படித்தான் நிரூபிததபோதிலும், புதரின் நிலையை அடைய எந்த மனிதனுமே நிரூபித்துக் காட்டமுடியவில்லையென்பதை இந்தத் தமிழர்கள் அறியார்களென்று எண்ணுவது ஒரு கேலியேயாகும்.

இப்பொழுது, தமது திரிமூர்ததிகள் முதலிய எல்லாக் கடவுளர்களின் புராணக் கதைகளையும் இழிவான நடிகர்—நடிகைகளைக்கொண்டு நடிப்பிகது ஆபாசங்களைக் கண்டு விநோதமடைகிறுர்கள் இந்தியர்கள தர்மசகரம் ஸ்ரீ ராதமகி, போதி விருக்ஷம் இம்மூன்றிலுமே மாத்திரம தோற்றமளிக்கும் புத்தபிரானைப் போன்று ஒரு எளிய தமிழனை நடிக்க வைத்தது களங்கமற்ற எண்ணத்தினுல்தான் என்பது உண்மையானுல், மிகவும் பெருமையாகப் பேசுகிற யாழ் பாணத்தவர்களின் கலாச்சாரதையையும் நாகரீகத்தையும்பற்றி உலகத்தவர் பார்தது ஆச்சரியபபடுவர் என்பது நிச்சயம்.

கிடைத்திருக்கும் செய்திகளிலிருந்து, இச்சம்பவத்திற்கு உடனே எதிர்பபைக் காடடுவதைவிட்டு, இந்த நாடகத்தில் சம்பந்தப்பட்ட நடிகர்களுக்கு தங்கப் பதக்கங்களும் பரிசளித்து ஆதரித்ததும் போக இப்படி புத்த சமயத்திற்கு செய்த அவமானததிற்கு யாழ்ப்பாணததிலிருக்கிற "சிங்களவர்களும் கலந்துகொண்டதாகத் தெரிகிறது. எனினும்' ஒதுக்கிவிட்டு மறந்திருக்கக்கூடிய விளையாட்டலல இது.

குர்ரான் வேதப் புத்தகத்தின் ஒரு இதழ் பாடசாலை சிறுவர்களின் காலகளில் மிதிபடுவிடடதற்காக, ஏழு-எட்டாயிரம் ஹிந்துக்கள் உயிரோடு கொலை செய்யப்பட்ட பம்பாயில் நடந்த கோர சம்பவததிறகு சமமான கோபாக்கினியை இங்கேயும் உண்டாகக விட பௌத்தர்கள் ஒருபோதும் விரும்பார்களெனினும புதபிரான் அருளிய சம்புத்த சாஸனத்தைக் காப்பாற்றுவதற்காக பௌத்தர்கள் விழிப்பாய் இருக்கவேண்டிய காலமே இது.

புத்த பிரானின் சரித்திரத்தைப்பற்றிய இததகைய சம்பவங்கள் இனிமேலும் ஏற்படாதபடி தடை செயவதற்கு உடனே அரசாங்கம் சட்டமியற்றவண்டியதுதான் இப்பொழுது எடுததுக்கொள்ள வேண்டிய நடவடிக்கையாகும். இதனுல் மாதகிரம் "புத்தரின் கருணை" யினுல் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த இந்த அவமானம் களைந்துவிடாது தெரிந்தோ-தெரியாமலோ, அல்லது வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடனே செய்யப்பட்ட இந்த அவமானததிற்குப் பௌத்தர்களிடம் மன்னிப்பு கேட்கச் செய்வதே இப்பொழுது செய்யவேண்டிய கௌரவமாகும்.

சப் இன்ஸ்பெக்டருக்கு 2 வருஷம் ஜெயில்

லஞ்சம் வாங்கியதாக புகார்

திருச்சி, டிச. 20

லஞ்சம் வாங்கியதாகவும், சட்டவிரோதமாக அடைததுப் போட்டதாகவும், பணம் பறிததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்த சேலம டவுன் சப்-இன்ஸ்பெக்டரான பால் திருதுவ தாளஎன்பவருக்கு திருச்சி இரண்டாவது அடிஷனல்முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் முதல் குற்றத்திற்காக 2 வருஷ கடுங்காவல தண்டனையும இரண்டாவது குற்றததிற்காக ஒரு வருஷ கடுங்காவல் தணடனையும் விதிததார். இரு தண்டனைகளையுமு ஏககாலததில் அனுபவிக்க வேண்டும்என்றும மாஜிஸ்டிரேட உததரவிட்டார்.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபிதது அப்பீல செய்துகொள்ள மாஜிஸ்டிரேட் எதிரிக்கு அனுமதியளிததது அவரை ஜாமீனில விடுவித்தார்.

தேசிய கிறிஸதவ மாதர் மகாநாடு

சென்னையில் நடைபெறும்

25 இலங்கைப் பிரதிநிதிகள் விஜயம்

கொழும்பு, டிச. 22

இந்தியா, பர்மா, இலங்கை தேசிய கிறிஸ்தவ மாதர் மகாநாடு சென்னையில் டிசம்பர் 30 ம் தேதியிலிருந்து ஜனவரி மாதம் 6-ம் தேதிவரை நடைபெறும். இந்தியா, பர்மா, மலையாவில் அரசியல் மாறுதல்கள ஏற்பட்டுள்ளபடியால் மகாநாடு பல விஷயங்களைப்பற்றி ஆலோசனைசெய்யும். இப்பொழுது இலங்கையிலிருக்கும் உலக கிறிஸதவ மாதர் சங்க நிர்வாகிகளான மிஸ வுட்ஸமல், மிஸ விஸ ஹஜம, ஆகியோர் மகாநாட்டுக்கு விஜயம செய்வார்கள் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், நீர்கொழும்பு, மட்டக்களப்பு, கல்முனை சங்கங்களைச் சேர்ந்த 25 பிரதிநிதிகள் மகாநாட்டுக்கு விஜயம்செய்வார்கள்.

கொழும்பு, கிறிஸதவ மாதர் சங்கததலைவி ஸ்ரீமதி வி குமாரசாமி, காரியதரிசி மிஸ். மக்னூடன், இலங்கை கிறிஸதவ மாதர் சங்கத் தலைவி ஸ்ரீமதி. எல் ஜி லூன்,மிஸ்,எட்வர்ட் ஆகியோரும் விஜயம் செய்வார்கள்

வீட்டு வாடகைக் கட்டுப்பாடு

இலங்கை சோனகர் சங்கத்தின் மகஜர்

கொழும்பு. டிச 22

இப்பொழுதுள்ள வீட்டு வாடகைக் கட்டுப்பாடுச் சட்டம் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு பல தொலலைகளைக் கொடுக்கக்கூடியதாகஇருக்கிறதென்றும், அதைக் கருவியாகக கொண்டு வாடகைக்கு குடியிருப்பவர்கள் தொந்தரவு கொடுக்கக் கூடியதாக இருக்கிறதென்றும் தெரிவித்து இலங்கை சோனகர் சங்கத்தார் ஸ்தல ஸ்தாபன மந்திரிக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்திருக்கிறுர்கள அதில் அவர்கள் மேலும தெரிவித்திருப்பதாவது:-

சட்டம் சரியான முறையில் இயற்றப்படாததால் வீட்டுச் சொந்தக் காரருக்கும் வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்கும நீதி மன்றங்களில் ஏராளமான வழகுகள் அதிகரித்து வருகின்றன. வாடகைக்குக் குடியிருப்பவர்கள் ஓட்டுக் குடித்தனங்களை வாடகைக்கு வைத்து பணம் சம்பாதிக்கிறுர்கள். 1941-ம வருடத்திய வாடகை விகிதத்தை நிர்ணயித்து அமுல் செய்வது அநியாயமாகும். வீடு கட்டும் திட்டத்தை அமுல செய்ய அரசாங்கமும் பொது ஜனங்களும் பங்குபோட்டு ஒரு தேசியவீடுகள் நிர்மாண கார்பொரேஷனை ஏற்படுத்த வேண்டும வீட்டு வாடகை கட்டுப்பாட்டுச் சட்டம் ரத்துசெய்யப்பட வேண்டும். இன்றேல் 1948 டிசம்பர் 31-ந் தேதிக்கு அப்பால் அச்சட்டத்தை அமுல் செய்யலாகாது. இது சமபந்தமாக இருகாப்பாரமடங்கிய ஒரு விசாரணைக் கமிட்டி நியமிதது பாராளுமன்றதுக்கு அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1947 ஜூன் 30-ந்தேதியுள்ள நிலவரபடி வீட்டு வாடகை நிர்ணயிககப்பட வேண்டும்.

மகஜரில் 11 கோரிக்கைகள் வற்புறுததப்பட்டிருக்கின்றன.

அபாயகரமான குற்றவாளி அகப்பட்டுக் கொண்டான்

வெளிக்கடை சிறையிலிருந்து தப்பியோடிய ஜெயசுந்தரா

தங்காலைக் காட்டில் தலைமறைவாகத் திரிந்தவனை போலிசார் பிடித்தவரலாறு

மற்றுமோர் குற்றவாளி இன்னும் மறைந்து இருக்கிருன்

கொழும்பு, டிச. 22

சிறையிலிருந்து தப்பியோடிய ஜெயசுந்தரா என்பவன் தங்காலை டிவிதிரிக்கிலுள எம்பிலிப்பிட்டியா என்னுமிடதது பிடிபட்டான். அவனைக் கைது செய்ய 5 போலீஸ்டேஷன்களைச் சேர்ந்த போலிஸ் அதிகாரிகள், மற்றும் மூன்று பேர்கள் 10 வயதுக்குட்பட்ட சிறுவன் ஆகியோர் சேர்ந்து முயறசித்து வெற்றிபெற்றனர்

ஜெயசுந்தரா வெளிக்கடை சிறையில் 17 வருட சிறைத தண்டனை விதக்கப்பட்டுச் சிறை வாசம் செய்து வந்தான். அவனைப் பிடித்துக் கொடுப்பவருக்கு 2000 ரூபாய் பரிசு வழங்குவதாக போலிசார் விளம்பரம் செய்திருந்தனர்.

டிசம்பர் 16-ம் தேதியன்று எம்பிலிப்பிடியாப் பகுதியில் ஒருவன விறகுக் கட்டு ஒன்றைத தூக்கிச் செல்லும்போது அவன் மீது சந்தேகம் ஏற்பட்டது அவனை எம்பிலிப்பிட்டிய கோரளை சோதனை செய்தார். உடனே அவன் தனது சட்டைப் பையிலிருந்து இருரிவாலவர்களை எடுத்து கோரளையைச் சுடடுவிடுவதாகப் பயமுறுத்தினுன். கோரளையும் அவருடன இருந்தவர்களும் ஓடிவிட்டார்கள். இததகவல் துங்கமா, தங்காலை போலிஸ்டேஷன்களுக்கு அறிவிக்கப்பட்டது.

போலிசார் காண்பித்த படங்களைப் பார்ததது அவன்தான் விறகு சுமந்து சென்ற ஜெயசுந்தரா என்பதை அடையாளம் கண்டுபிடிததார்.

டிசம்பர் 17-ம் தேதி இரவு 7-30 மணிக்கு ஒரு போலிஸ் கோஷ்டி மறைவாக இருந்து ஒரு மனிதனைப் பின்தொடர்ந்து சென்றது. அவனை நிற்கும்படி அக்கோஷ்டி உததரவிட்டது அந்த உத்தரவை அவன் மீறிச் சென்றுன. பிறகு அவன் போலிசாரை நோக்கி திருப்பி அவர்களைச் சுடடுவிடுவதாகப் பயமுறுததினுன்.

அவன் தான் ஜெயசுந்தராவாக இருக்குமென்று சந்தேகித்து போலிசார் அவனை நோக்கிச் சுட்டார்கள். உடனே அவன் கால்வாயில் குதிதது மறைந்துவிடடான்.

போலிஸ கோஷடி பக்கத்திலுள்ள காடுகளில எல்லாம் தேடிப் பார்ததது. துவுட மிருகங்கள் வசிகும் 800 சதுரமைல் விஸ்தீரணமுள்ள காடுகளில் அவனைக் கண்டுபிடிக்க போலிசார் தேடினர்.

டிசம்பர் 18-ம் தேதியன்று போலிஸ சார்ஜண்டு ஜெயவர்தனுவும் ஒரு கான்ஸ்டபிளும் மறைவாகப் பதுங்கி யிருந்து அவனைப் பிடிக்க முயற்சித்தனர்; மறுநாள் காலை 6-30 மணிக்கு ஒரு கடையில் அவனைக் கண்டுபிடித்து கைது செய்தனர்.

அவன் எவ்வளவோ எதிர்த்தும் பயன்படவில்லை திசமாருவிலிருந்து 10 மைல் தூரத்திலுள்ள அண்டல்லா எனனும் கிராமத்திலுளள ஒரு கடையில அவன தென்பட்டபோது அவனைக் கண்டுபிடிததது கைது செய்ய 10 வயதுள்ள ஒரு சிறுவன உதவி செய்தான்.

இந்த அபாயகரமான ஜெயசுந்தராவைக் கைது செய்ய போலிஸ் சார்ஜண்டும் கான்ஸடபிளும் அவனைக் கட்டிப் பிடிததபோது, அவன் அவர்கள் பிடியிலிருந்து விடுபட பலமாகப் போராடிகொண்டு அவர்களைச் சுட முயலுறுன. 10 வயதுள்ள ஒரு சிறுபையன் மெதுவாக நகாந்து வந்து ஜெயசுந்தராவின் கால்களைக் கயிறுல் முடிச்சுப் போட்டு கட்டி அக்கயிற்றை அங்கிருந்த ஒரு கட்டில் காலில் சேர்த்துக் கட்டிவிட்டான். இவ்விதம் ஜெயசுந்தரா கைது செய்யப்பட்டான். அவனிடம் 4 ரிவால்வர்களும் ரவைகளும் இருந்தன. பிறகு அவனை தங்காலைக்குக் கொண்டுவந்து அங்கிருந்து கொழும்புக்குக் கொண்டுவந்து வெளிக்கடை சிறையில் போலிசார் ஒப்புவித்தனர். போலிஸ உதவி சூப்பிரின்டெண்டு திரு பி ஆர். டி. எஸ. சேனிவிரதனு அவனை தங்காலையிலிருந்து கொழும்புக்குக் கொண்டுவந்தார்.

போலிசார் இவனைப் பிடிக்க இலங்கை யெல்லாம் தேடிய முயற்சி பலனளிததது. ஆனுல் சிறையிலிருந்து தப்பிய மற்றொரு கைதியான சார்ல்ஸ எனபவன் இன்னும் தலைமறைவாக இருக்கிருன். அவனைப் பிடித்துக் கொடுப்பவருக்கு போலிசார் 1000 ரூபாய் பரிசளிப்பதாக விளம்பரப்படுத்தியிருக்கின்றனர்.

இந்தியா-பாகிஸ்தானுக்கு இலங்கை பிரதமர் விஜயம்

இலங்கை விமானத்தில் பயணம்

கொழும்பு, டிச 22

இலங்கை பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயகா இலங்கை டகோடா விமானத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும விஜயம செய்வர் அவரது பயணத்துக்கெனச் செலவு இலங்கை விமானத்தை இலங்கை விமானியான கேப்டன பீட்டர் பொனுன்டோ ஓட்டிச் செல்வார். விமானத்தின் மற்ற சிப்பந்திகளும் இலங்கையர்களே. அடுததவெள்ளிக் கிழமை காலை 8 30 மணிக்கு ரம்மலானு விமான நிலையததிலிருந்து புறப்படும.

அன்று மாலையே பம்பாய் போய்ச் சேரும். அடுத்தநாள் பம்பாயிலிருந்து போபாலசெல்லும். போபாவில் திரு சேனாயகா சாஞ்சி புத்த விஹார விழாவில் கலந்துவிட்டு டில்லிக்கு பயணமாவர்.

வெள்ளக் கஷ்ட நிவாரண நிதி

வசூலை நிறுத்திவிட முடிவு

கொழும்பு டிச, 22

டிசம்பர் 31-ந் தேதியோடு வெள்ளக் கஷ்ட நிவாரண நிதி வசூலை நிறுத்திவிட மந்திரிகளை கலந்து ஆலோசித்து கவர்னர் முடிவு செய்திருக்கிருர். இதுவரைவசூலான நிதியின்தொகை ரூ 895,069-54 நிதிக்குப் பணம் உதவியாருக்கு நன்றிசெலுததுவதுடன் வசூல் நிறுத்தப்படுவதற்கு முன் பணம் உதவ விரும்புவோர்பணம் உதவுமபடி கவர்னர் கேட்டுக்கொள்ளுகிருர். மொத்தம் வசூலான தொகையின் விபரம், வெள்ளத்தில் கஷ்டப்பட்டவர்களுக்கு செலவளிக்கப்பட்ட செலவின் விபரம், அரசாங்கம் கஷ்ட நிவாரணத்திற்கு உதவிய பணத்தின் செலவு விபரம் இவைகள் அடங்கிய அறிக்கை யொன்று புது வருட ஆரம்பத்தில் பிரசுரிக்கப்படும்.

ரேடியோ அபிவிருத்தித் திட்டம்

கிராமாந்தரங்களில் 200 ரேடியோக்கள் நிறுவப்படும்

கொழும்பு; டிச 22

இலங்கை மக்களிடையே ரேடியோ மனப்பான்மையை அதிகரிக்க ரேடியோ அபிவிருத்தித் திட்டத்தை அமுல் செய்ய அரசாங்கம் தீர்மானிததிருக்கிறது கூடிய சீக்கிரம் 200 ரேடியோக்கள்வரை கிராமாந்தரங்களில் நிறுவப்படும். தபால் கந்தோர் அதிகாரி இந்த ரேடியோவை மேற்பார்வை செய்து வருவார்.

அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கம்

கொழும்பு, டிச. 22

அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கத்தின் புதிய நிர்வாகக் கமிட்டி தங்கள் வேலைத் திட்டத்தில் அரசியலை நீக்கி விடத் தீர்மானித்திருக்கிறது. அரசாங்கத்துடன் ஒத்துழைப்பது அவர்கள் கொள்கை. அவர்களது உரிமைகளை அரசாங்கம் மறுக்காது என்று அவர்கள் நம்புகிருர்கள் காணி கமிஷனர் கந்தோரைச் சேர்ந்த திரு. டி. வி. ஹொரட் இச்சங்கததின் காரியதரிசி.

தர்ம கைங்கரியம்

காங்கேசன்துறை
க்ஷயரோக ஆஸபத்ரியில்
இருக்கும் வியாதியஸ்தர்களின்
நன்மையை முன்னிட்டு எனது
செலவில் கட்டியிருக்கிற
புத்த விகார ஆலயத்தை
தபால் தந்தி இலாகா காரியதரிசியும்
புத்த பாடசாலை அதிபருமாகிய
கனம் A. P. ஜயசூரியா
அவர்களால்
நிகழும் 1947 ஞு டிசம்பர் மாதம்
27-ந் தேதி சனிக்கிழமை
காலை 10 மணியில்வரும்சுபநேரத்தில்
திறந்தவைப்பார்கள்.
அவ்வமயம்,
தாங்களும் தங்களை சுற்றியுள்ளவர்களும் சமுகந்தந்து ஆராதிக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்ளுகிறோம்,
இங்ஙனம்,
A. G. விக்ரமபால
ட்ரெஸ்டி:-
மலிபான் ஹோட்டல் லிமிட்டட்,
கொழும்பு.

உங்கள் நோய் எதுவானுலும் சரி
உத்தரவாதமாக தீர்த்துதருகிறேன்.

வாழ்க்கையைப் பாழ்படுத்தும் கொடூரமான தொற்று வியாதி உள்ளவர்கள் தங்களுக்குப் பின்னுல் நோயும் கஷ்டமும் அனுபவிக்கும் சந்தானததைத் தவிர வேறொன்றையும் நிலைக்கச் செய்வதில்லை. எனவே உங்களைப் பீடித்திருக்கும் கொடிய பிணிகளை அகற்றி சுகத்துடன் வாழ என னுடன கலந்து ஆலோசியுங்கள்.

அஸமா, காசம், க்ஷயம், மூலம், வாதம், குஷடம் என்றும் தீராத நோய் எதுவானுலும்சரி உத்தரவாதமாய் தீர்த்துதருகிறேன். நோய்எதுவானுலும் பொருத்தம் பேசியும் தீர்த்து கொடுக்கப்படும். நான் எனது கிளை வைத்தியசாலை நம்பர் 23/7 ஸ்டான்லி ரோட் (வெல்லிங்டன் படமாளிகைக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். இம்மாதம் 30-ம் திகதிவரை தங்கி இருப்பேன்.

Ayur Dr. V. K. S, செல்லப்பாபிள்ளை M. A. M. S. (கல்கத்தா)

சிவானந்த சித்தர் வைத்தியசாலை,
ஹெட் ஆபீஸ்: 92 செட்டியார் தெரு, கொழும்பு.
பிராஞ்சு ஆபீஸ்கள்:
768 லோவர் வீதி, பதுளை.
23/7 ஸ்டான்லி ரோட், யாழப்பாணம்.

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லொசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும், இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும்
கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனேன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேஷிய யுத்தத்துக்கு நாஸிகள் அனுப்பப்பட்டனர்

அமெரிக்க பிரிட்டிஷ் அதிகாரிகள் மீது கம்யூனிட் பத்திரிகை குற்றச்சாட்டு

லண்டன், டிச. 20

கம்யூனிஸ்ட் பத்திரிகையான "டெயிலி வோர்க்கர்" இன்று முதல் பக்கத்தில் பெரிய தலையங்கங்களுடன், நாஸி ஜெர்மனியர்கள் மேற்கு ஜெர்மனியில் சேர்க்கப்பட்டு கிரீஸ், துருக்கி, இந்தோனேஷியா ஆகிய இடங்களில் யுத்தம் செய்யப் பயிற்றப்படுவதாக எழுதியுள்ளது. ஜெர்மனியிலுள்ள அமெரிக்க பிரிட்டிஷ் அதிகாரிகள் இவர்களை சிறைகளில் வைக்க மறுத்து அவர்களுக்கு ஆயுத உதவி செய்வதாக தம் பத்திரிகை கூறுகின்றது.

இந்தோனேஷியாவுக்கு அனுப்பப்படும் நாஸிகள் ஆம்ஸ்டாமுக்கு வட ஜெர்மனியிலிருந்து கொண்டுவரப்பட்டு அங்கிருந்து இந்தோனேஷியாவுக்கு அனுப்பப்படுவதாகவும் ஹிட்லரின் ஜெர்மன் படையைச் சேர்ந்த மாஜி அங்கத்தவர்களைக்கொண்ட ஒரு மோட்டார் படை ஜாவாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் 1943-ம் வருடத்தில் செகோஸ்லாவகியாவில் பாஸிஸ எதிர்ப்பு இயக்கத்திலீடுபட்ட மாணவர்களைக் கொலை செய்ததற்கு பொறுப்பாக இந்தவரென்று கூறப்படும் கர்னல் முல்லர் என்பவர் இதற்கு தலைமையாக இருப்பதாகவும் பத்திரிகை கூறுகின்றது. (ராய்ட்டர்)

அந்நிய நாடுகளுக்கு இடைக்கால பண உதவி

மார்ஷல் திட்ட மசோதா

சைனாவின் தொகை குறைக்கப்படுகிறது

வாஷிங்டன், டிச. 19

உலகம் பொதுவுடமைகாரர் ஆதிக்கத்திற்குட்படுவீர் குலையாது உலகில் ஜனநாயகத்தையும் அமைதியையும் நிலைநாட்ட ஐரோப்பிய மீட்சிக்கு நான்கு வருடம் மூன்று மாத பொருளாதாரப் புனருத்தாரணத்திட்டத்திற்காக அமெரிக்க அரசாங்கம் ஐரோப்பிய நாடுகளுக்கு 1700 கோடி டாலர் வழங்க அனுமதி அளிக்கும்படி அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் இன்று அமெரிக்க காங்கிரஸ சபையைக் கேட்டுக் கொண்டார். 1948 ஏப்ரல் முதல் தேதி முதல 15 மாதத்திட்டத்திற்குமுதலாவதாக 680 கோடி டாலர் அனுமதிக்கும்படி கேட்டார்.

அந்நிய நாடுகளுக்கு இடைக்கால உதவிக்கு பணம் அனுமதிக்கும்படி கோரும் மசோதா இன்று செனட் சபையில் விவாதிக்கப்பட்டது. சைனாவுக்கு அளிக்கப்படும் 200 லட்சம் டாலரை 180 லட்சம் டாலர் ஆக்கும்படி திருத்தம் கொண்டுவரப்பட்டது. திருத்தம் ஒப்புக்கொள்ளப்பட்டது ஆகவே இதன்படி மொத்தம் அந்நிய நாடுகளுக்கு உதவ இம்மசோதாப்படி 55 கோடி 80 லட்சம் டாலருக்கு அனுமதி கோரப்பட்டது மசோதா நிறைவேறியது.

காங்கிரஸில் மார்ஷல் திட்டப்படி கோரப்பட்ட பண அனுமதிக்கு குடியரசுக் கட்சியினர் எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது வருடத்திற்கு 400 கோடி டாலர் வீதம் அனுமதிக்கவேண்டுமென்றும் ஒரு வருடத்திற்கு பரீட்சார்த்தமாக பண அனுமதிக்கப்பட வேண்டுமென்று அக்கட்சியார் விரும்புகிறார்கள்.

காசியில் பெண்கள் கல்லூரி மாணவிகள் உண்ணாவிரதம்

காசி, டிச. 19

காசியிலுள்ள பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த 4 மாணவிகள் நேற்றுமுதல் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகின்றனர். டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் சர்வகலாசாலைஉபஅதிபராக நீடித்திருக்க வேண்டுமென்பது அவர்களது கோரிக்கை.

இன்று பெண்கள் கல்லூரியில் ஏராளமான மாணவிகள் வகுப்புகளுக்குப் போகவில்லை.

மேற்கு ஜாவாவில் அதிகார மாற்றம்

டச்சு கவர்னர்ஜெனரல் டாக்டர் வான்மூக் பேச்சு

பட்டேவியா, டிச. 20

மேற்கு ஜாவாவையும் அங்குள்ள 12,000,000 பிரஜைகளையும் ஆட்சி செய்வதற்கு தற்காலிக அரசாங்கத்திடம் அதிகாரத்தை டச்சு அரசாங்க சார்பில் டாக்டர் வான்மூக் ஒப்படைத்தார்.

மேற்கு ஜாவாவிலுள்ள இந்தோனேஷியாவுடன் நான்குநாட்கள் மகாநாடு நடந்தது. இம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி அதிகார மாற்றம் நிறைவேற்றப்பட்டது. நேற்று மகாநாடு முடிவுற்றபோது தற்காலிக அரசாங்க நிலைமை பற்றியே விபரங்கள் சமீபத்தில் நடக்க இருக்கும் அடுத்த மகாநாட்டில் முடிவு செய்யப்படுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தோனேஷிய குடியரசின் ஒரு பகுதியாக இருந்த மேற்கு ஜாவா, டச்சு அரசாங்கத்தின் போலீஸ நடவடிக்கையின்பின் அவர்கள் அதிகாரத்துக்குள்வந்திருந்தது. இதனை இந்தோனேஷிய குடியரசு அரசாங்கம் திரும்பத் தரவேண்டுமென்று கோரியுள்ளது.

டாக்டர் வான்மூக் பேசுகையில் இந்தோனேஷிய சமஷ்டி அரசாங்கத்தை வேண்டுமென்று கூறியவர்கள் இப்பொழுது அதனை அமைக்கலாமென்றும் இந்தோனேஷிய அரசியல் நிர்ணயமில் வருங்காலத்தையிட்டு முடிவு செய்யப்பட வேண்டிய நோமென்றும் கூறினார் மேற்கு ஜாவாவின் 172 பிரதிநிதிகளின் கோரிக்கையை நெதர்லாந்து அரசாங்கம் ஏற்றுள்ளதாகவும் மேற்கு ஜாவாவின் சட்ட ஒழுங்கு அமைதி முதலானவற்றை மீண்டும் இந்த முறை நிலைநாட்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ராய்ட்டர்)

பாலஸ்தீன பிரிவினை அநியாயம்

பாகிஸ்தான் மீது பிரிட்டனின் அலட்சியம்

பிரிட்டிஷ் ரேடியோ பிரதிநிதியிடம் ஜனாப் ஜின்னா அறிக்கை

கராச்சி, டிச 19

இன்று பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜனாப் ஜின்னா பிரிட்டிஷ் ரேடியோ பிரதிநிதிக்கு பேட்டியளித்த போது பின்வருமாறு தெரிவித்தார்:-

பாலஸ்தீனத்தைப் பிரிக்க ஐக்கிய தேச ஸ்தாபனம் செய்துள்ள அநியாயமான தீர்மானத்தை இந்தியா கண்டத்திலுள்ள சகல முஸ்லிம்களும் மனமகக்கண்டிக்க வேண்டியதாக இருக்கிறது. அகில இந்திய முஸ்லிம்கள் அமெரிக்காவை விரோதப்படுத்த விரும்பவில்லை. ஆனால் நியாயத்தை முன்னிட்டு நாங்கள் பாலஸ்தீன அராபியருக்கு ஆதரவளிக்க வேண்டும். பாலஸ்தீனத்திற்கு நியாயம் வழங்க பிரிட்டன் உறுதியாக நடந்து கொள்ளவில்லை. பாகிஸ்தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள்ளிருப்பது பற்றி அரசியல் நிர்ணய சபைதான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் பரஸ்பர நன்மையை முன்னிட்டு பாகிஸ்தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள்ளிருக்கத் தயார். தற்சமயம் பிரிட்டன் பாகிஸ்தான் சம்பந்தமாக அலட்சியமாக நடந்து வருகிறது சாம்ராஜ்யநாடுகளுக்குள்ளிருக்கும் (இந்தியா-பாகிஸ்தான்) தகராறுகளை தீர்ப்பதில் பிரிட்டன் தனது செல்வாக்கை உபயோகிக்கத் தவறிவிட்டது. இந்திய முஸ்லிம்கள் புதிய பிரச்னைகளைச் சமாளிக்கவேண்டியதாக இருப்பதால் முஸ்லிம் லீக் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. காஷ்மீர் சம்பந்தமாக இந்தியா-பாகிஸ்தான் பிரதம மந்திரிகளுக்கிடையே சமரசப் பேச்சு நடைபெறுவதால் அதைப்பற்றி எதுவும் சொல்ல முடியாது.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

"பட்டிருப்புத் தொகுதி செய்த பாவமா?"

ஐயா,

பாராளுமன்றம் கூடிய காலம் தொடங்கி பல பிரதிநிதிகளும் தங்கள் தங்கள் மக்களின் குறைகளைச் சலிக்காது பேசிக்கொண்டே வருகின்றனர். "அழுத பிள்ளைதானே பால் குடிக்கும்" என்பது முதுமொழியன்றோ? அஃதேபோல ஒரு காலத்தில் அத்தொகுதி மக்கள் வயிறு நிரம்பப் பால் பருக, அரசாங்கம் உதவியளிக்கும் என்பது துணிபு

ஒரு பிரதிநிதி தம் தொகுதியிலுள்ள குறைகளை எடுத்துப் பேசி அதனை நிவிர்த்திக்க முயலுமிடத்தில் அத்தொகுதி வாக்காளர் எவ்வளவு உணர்ச்சியும், உற்சாகமும் அடைகின்றனர் என்பது சொல்லுந்தரமன்று

ஆனால் ஐயா! எங்கள் பட்டிருப்புத் தொகுதிப் பிரதிநிதி திரு எதிர்மன்ன சிங்கம் அவர்கள் இன்னும் பேசாமடந்தையாயிருப்பது நியாயமாகுமா? இவர் இப்போதான் பால் வகுப்புப் படிக்கிறாரா? அன்றேல் யூ என். பியின் மாயவலையில் சிக்கி வழி தெரியாது விழிக்கிறாரா? தெரியவில்லையே? இஃது எங்கள் தொகுதி மக்கட்கு நானாததையும் மனவருத்தத்தையும் தருவதாயிருக்கிறது.

நண்பர் அவர்கள் தேர்தல் காலத்தில் வெட்டி வீழ்த்தவேன என்று தெருத்தெருவாகத் தம்பட்டம் அடித்தார் அச்சு நோட்டீஸ்களும் பிரசுரித்தார். பதவி கிடைத்ததும் நண்பர் கும்பகர்ணப் படலத்தைக் குடையாகத் தாங்கிக் கொண்டார். அன்பரே! யுத்தம் மும்முரமாய் விட்டது; தூங்காதேயும் இந்தநேரத்தில் ஒன்றோ உங்களுடைய ஆண்மையையும் திறமையையும் நடித்துக் காட்டவேண்டும்?

ஆகையால், நண்பரே! ஆசை வார்த்தையால் எங்களை அணுகி, உதயோகத்தை வகித்துக்கொண்டு உறங்கலாமா? எம்மக்கள் குறை தீர ஆவன புரிவதற்கு துயில் எழுங்கள்! துணிவு கொள்ளுங்கள்! தயார்!

வ செல்லத்துரை

களுதாவளை
18-12-47.

விபுலானந்த ஞாபகச் சின்னம்

ஐயா,

காலஞ்சென்ற ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராய் இருந்ததோடு நமது மக்களின் முன்னேற்றத்திற்குப் பலனுக்குமாக நற்பணியாற்றி இருக்கிறார். அப்பணிகளை முன்னிட்டு சுவாமிஜிக்கு ஒருதகுந்த ஞாபகச் சின்னம் நிறுவுவதற்கு அவரது நண்பர்கள், ஆதரவாளர்கள் முதலியோர் முன்வரல் வேண்டும் என்று உங்கள் பத்திரிகைமூலம் நான் வேண்டிக்கொள்கிறேன்.

இது சம்பந்தமாக ஞாபகச் சின்னக் கமிட்டியால் மட்டக்களப்பு சிவானந்த வித்யாலயத்தில் உள்ள அவரது சமாதியின் மேல் ஓர் சபா மண்டபம் நிறுவி அதில் அவரது உருவச் சிலை நிறுவவேண்டுமென்றும், உயர்தரப் படிப்புக்கு தகுதியுள்ள மாணவர்களுக்கு இலவச கல்விதர ஒரு நிதி நிறுவவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிதிக்குப் பண உதவி செய்ய விருப்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கனுப்பும்படி கோரப்படுகின்றனர். தலைமை ஆசிரியர், சிவானந்த வித்யாலயம், மட்டக்களப்பு.

எஸ். அம்பலவாணர்.
காரியதரிசி, விபுலானந்த ஞாபகச் சின்னக் கமிட்டி.
மட்டக்களப்பு,
19-12-1947

சயாமின் புதிய அரசாங்கம்

அங்கீகரிப்பதுபற்றி ஏனைய நாடுகள் ஆலோசனை

லண்டன், டிச 19

சயாமின் புதிய அரசாங்கத்தை அங்கீகரிக்கலாமா என்பதைப் பற்றி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ, பர்மா, இந்தியா ஆகிய நாடுகள் ஆலோசனை செய்துவருகின்றன.

கள் இறக்குபவர்களுக்கு அரசாங்கம் பென்ஷன் கொடுக்கவேண்டும்

தொழிலாளர் சங்கத்தின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிச. 19

வட இலங்கைத் தொழிலாளர் சங்கத்தின் விசேஷ கூட்டம் சென்ற வியாழக்கிழமை பகல் சங்கத்தலைவர் திரு அ. பிதம்பையா அவர்கள் தலைமையின் கீழ் சேணியத் தெருவில் நடைபெற்றது.

அத்தருணம் கீழ்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

1 கள் சீவலகாரர், பல வளவுகளிலும் சேர்க்கும் கள்ளை ஒரே வளவில் கொண்டுவந்து விற்பனைசெய்ய மரவரி துவக்கின போது ஸ்பெஷல் பெர்மிற்று கொடுத்துவந்த மாதிரியே இப்பொழுதும் கொடுக்கப்படல் வேண்டும்.

2. சீவல் தொழிலாளராகிய ஏழைகள் வருஷாவருஷம் பெருந்தொகை வரியை கொடுத்து வருவதால் அவர்கள் தொழில் செய்ய இயலாத பிற்காலத்தில் பென்ஷன் கொடுத்து அரசாங்கம், உதவி செய்ய வேண்டும்.

3 யாழ்ப்பாணத்தில் தென்னை பனைகள் ஏராளமிருப்பதால் சாராயம் வடிக்கும் தொழில் சாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

4. மது பரிபாலன இலாகாவின் சீர்திருத்த சம்பந்தமாக நடைபெற்ற கமிஷன் விசாரணையின் ரிப்போர்ட்டுகளை தமிழ் சிங்களம் முதலிய பாஷைகளில் வெளியிடப்படவேண்டும்.

5 மதுபரிபாலன இலாகா உத்தியோகஸ்தரும் மற்றும் அரசாங்க கந்தோர் உத்தியோகஸ்தரும் கைலஞ்சம் வாங்குவதுபற்றி விசாரணை செய்ய ஓர் கமிஷன் நியமிக்கப்படல் வேண்டும்.

6. உள்நாட்டு மந்திரிகள் அவர்கள் யாழ்ப்பாணம் இடையிடையே வந்து இவ்விடத்திலுள்ள குறைமுறைகளை பரிசீலனை செய்துவர வேண்டும்.

மேற்படி தீர்மானங்களை நிறைவேற்றி வைக்கும்படி தேசாதிபதி அவர்களையும் உள்நாட்டு மந்திரி அவர்களையும் பாராளுமன்ற சபையாரையும் செனட்சபையாரையும் இக்கூட்டம் வேண்டிக் கொள்ளுகின்றது.

வட இலங்கைத் தீவக சமாசம்

கொழும்பு, டிச. 19

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக் கிழமை அட்வகேட் திரு தில்லைநாதன் அவர்களின் தலைமையில் கூடிய வட-இலங்கைத் தீவக மக்களின் மாநாட்டில் வட-இலங்கைத் தீவக சமாசம் என்னும் பொதுஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது.

அவ்வமயம் சமாச வரவேற்புக் கழகத் தலைவர் திரு வ. நவரத்தினம் அங்கு குழுமியிருந்த பிரதிநிதிகளை வரவேற்றப் பேசுகையில் வட-இலங்கையின் தீவக மக்கள் யாவரையும் ஒற்றுமைப்படுத்தி அவர்களின் சமூக நலம், பொருளாதார அபிவிருத்தி, அறிவாக்கம் என்னும் நலன்களை மேலோங்கச் செய்து பொதுஜன ஊழியத்தில் ஈடுபடுவதே இச் சமாசத்தின் நோக்கங்கள் எனவும், சமாசம் அரசியல் விஷயத்தில் ஈடுபடாதென்றும் இச் சமாசத்தை எவராவது தமது சுயநல காரியங்களுக்கு உபயோகப்படுத்த இடங்கொடாதென்றும் குறிப்பிட்டார்.

பார்லிமெண்டில் தீவகங்களின் பிரதிநிதியாகிய திரு ஏ. எல். தம்பிஅய்யா அவர்கள் சமாசத்தின் ஸ்தாபன கர்த்தாக்களின் முயற்சியை மெச்சியும் சமாசம் நெடுங்காலம் மேலோங்கி வளர்ந்து பொதுஜன சேவையில் மேம்பாடுறுக என ஆசிகூறினார்.

பின்வருபவர்கள் சமாசத்தின் காரியக் கழகத்திற்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைவர்:- திரு. வ. நவரத்தினம். உபதலைவர்:- திரு. சி. சரவணமுத்து. பொருளாளர்:- திரு. சு. சர்வானந்தா, செயலாளர்:- திரு. ச. செபஸ்தியாம்பிள்ளை. உபசெயலாளர்:- திரு ஆர். வி. பொன்னம்பலம்.

சமரச முடிவு

பாம்கார்டன் வேலை நிறுத்தம்

தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்

ரத்னபுரி, டிச. 20

பாம்கார்டன் தோட்டத் தொழிலாளர் யூனியனின் சமரசக் கோரிக்கைகளை தோட்ட நிர்வாகிகள் ஏற்க மறுத்ததன் காரணமாக 49 தினங்களாக வேலை நிறுத்தம் செய்து வந்த 1700 தொழிலாளர்கள் 18-ம் தேதியன்று வேலைக்குத் திரும்பினர். வேலை நிறுத்தம் நடைபெறும் போது நெருக்கடியான நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டு முதலாளிகள் சங்கத்தலைவரும் தொழில் இலாகாவுக்கும் கண்டியிலுள்ள இந்திய அரசாங்க ஏஜெண்டுக்குமிடையே கடிதப் போக்கு வரத்துகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. சமரசம் ஏற்படாததால் இந்த டிஸ்திரிக்டிலுள்ள எல்லா தோட்டத் தொழிலாளர்களும் 18-ம் தேதியன்று அனுகூல வேலை நிறுத்தம் ஆரம்பிப்பதெனத் தீர்மானித்திருந்தார்கள். இந்திய அரசாங்க ஏஜெண்டு திரு என். எஸ். ராகவாச்சாரி குறுக்கிட்டு முதலாளிகள் சங்கத்துடன் சமரசம் ஏற்பாடு செய்ததன் காரணமாக 17-ம் தேதியன்று தோட்ட நிர்வாகிகளுடன் தொழிலாளர் யூனியன் ஒரு சமரச முடிவு ஏற்பட்டது. இச்சமரச முயற்சிக்கு பாராளுமன்ற அங்கத்தினர் திரு. கே. ராஜலிங்கமும், தொழில் அதிகாரியும் உதவி செய்தனர். அதன் பேரில் 18-ம் தேதியன்று வேலைக்குத் திரும்பினர். இப்பொழுது முன்னிருந்தபடி நிர்வாகிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே பரஸ்பர ஒத்துழைப்பு ஏற்பட்டிருக்கிறது.

வகுப்புக் கலவரத்தில் இருவர் பலி

முஸ்லிம் தினசரிக்கு பம்பாயில் தடை

பம்பாய், டிச. 20

மத்திய பம்பாயில் இன்று அதிகாலையில் நடந்த கத்தித்தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டும் இருவர் காயமடைந்துமுள்ளனர் என அதிகார பூர்வமான அறிக்கை கூறுகிறது 48 மணி நேர ஊரடங்குச் சட்டம் வகுப்புக் கலவரங்கள் நடந்த இருபகுதிகளில் அமுலுக்குவந்துள்ளது.

முஸ்லிம் லீக் தினசரி பத்திரிகையான "டான்" பத்திரிகையை பம்பாயில்வாங்கி விற்பனை செய்வதை பம்பாய் அரசாங்கம் தடைசெய்துள்ளது.

[ராய்ட்டர்]

யந்திரங்கள்

அரிசி குத்தும் யந்திரங்களும் அதற்கேற்ற இணைக் கருவிகளும்

மா அரைக்கும் யந்திரங்களும் அதற்கேற்ற இணைக் கருவிகளும்



கொஞ்சம் வந்திருக்கின்றன. உங்கள் தேவையைத் தாமதியாது பெற்றுக்கொள்ளுங்கள்.

சாமுவேல் சன்ஸ் அன் கம்பனி லிமிடெட்.,

371, பழைய சோனக தெரு, கொழும்பு. 12.
டெலிபோன் 2341. (8 லைன்கள்)

சீர்மைப் பழச் சத்துகளால் தயாரிக்கப்பட்ட பானங்கள்

12 விசேஷ மணங்கள்

எல்லோருக்கும் உகந்தது; இதுவே சிறந்தது!

Delicious VITTO FRUIT SYRUP

தயாரிப்பவர்கள்:—
விற்றோ புரோடெக்ஸ் கம்பெனி லிமிடெட்,
தெஹிவளை.

கல்வியே கருந்தனம்

கிங்ஸ்லியில்

தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ. சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடிக்கும்

கன்னிகா

மகத்தான 6-வது வாரம்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்தது.

கிரவுன் தியேட்டர்

ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

'இழந்த உறுதி'

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டிறகாக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 22-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிந்தாரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org